IVANMIYUR MADRAS 41

# தென் இந்தியா க்ஷேத்ரங்கள்

பி. வி. ஜகதீச அய்யர் இயற்றியது.

**4**

கரூர், நெரூர்,
திருமழவாடி,
கங்கைகொண்டசோழபுரம்,
அன்பில்.

# தமிழ் புத்தகங்கள்.

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| **தென் இந்தியா க்ஷேத்திரங்கள்:** | | | |
| 1. ஸ்ரீரங்கம் ... | 0 | 10 | 0 |
| 2. சிதம்பரம் ... | 1 | 0 | 0 |
| 3. திருவானைக்காவல், திருச்சினாப்பள்ளி, உய்யக்கொண்டான் திருமலை | 0 | 10 | 0 |
| 4. கரூர், நெரூர், கங்கைகொண்ட சோழபுரம், அன்பில் ... | 0 | 10 | 0 |
| திருவானைக்காபுராணம் ... | 2 | 0 | 0 |
| கம்பராமாயணம்: சுந்தரகாண்டம் ... | 1 | 8 | 0 |
| ஸ்ரீ சங்கரபகவத்பாதர் சரித்திரம் ... | 1 | 0 | 0 |
| பகவத்கீதை வெண்பா ஷட்கம்—1 ... | 0 | 6 | 0 |
| ஷட்கம்—2 ... | 0 | 6 | 0 |
| ஷட்கம்—3 ... | 0 | 6 | 0 |
| தேவீ கீர்த்தனைகள் ... | 0 | 2 | 0 |
| ஸத்குருஸ்துதி ... | 0 | 2 | 0 |
| ஸுப்ரமண்யஸ்வாமி ஸ்தோத்ரங்கள் | 0 | 5 | 0 |
| சிருங்கேரி ஸ்வாமிகள் கொடுமுடியில் செய்த உபன்யாஸம் ... | 0 | 2 | 0 |
| ராமாயணஸாரஸங்கிரஹம் ... | 0 | 2 | 0 |
| சுண்ணாம்பு, சாந்து, சிமெண்டு, காங்கிரீட் தளவரிசை இவைகளைப்பற்றிய நூல் ... | 0 | 4 | 0 |
| சித்ததரன் ... | 0 | 2 | 0 |
| காங்கிரஸ் மஹாஸபை ... | 0 | 4 | 0 |
| தேவபோகம் ... | 1 | 0 | 0 |
| நாற்பது லக்ஷம் ரூபாய் ... | 0 | 3 | 0 |
| தாதாவின் தந்திரம் ... | 0 | 2 | 0 |
| ஓர் இரவின் ஸம்பவங்கள் ... | 0 | 6 | 0 |
| ஹேமந்தகுமாரி ... | 0 | 2 | 0 |
| ஹென்றி பெஸ்டலோஸி ... | 0 | 2 | 0 |
| ஹிரண்மயி ... | 0 | 2 | 0 |
| கிருஸ்துபோன்ற ஒழுக்கமுறைநூல் | 1 | 0 | 0 |
| இந்தியாவும் சுய ஆட்சியும் ... | 1 | 8 | 0 |
| இந்திரா ... | 0 | 2 | 0 |
| கொடியாலம் வாசுதேவ அய்யங்கார் | 0 | 2 | 0 |
| காவடிசிந்து ... | 0 | 2 | 0 |
| லஜ்ஜாவதி ... | 0 | 2 | 0 |
| மாலதீ ... | 0 | 3 | 0 |
| பெருமுடிச்சோழன் ... | 0 | 6 | 0 |
| அன்பின் வலிமை ... | 0 | 10 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| பிருதிலை ... | 0 | 8 | 0 |
| இராதாராணி ... | 0 | 2 | 0 |
| ஸத்குரு கீதை ... | 0 | 8 | 0 |
| வீரமாதேவன் ... | 0 | 4 | 0 |
| வித்யாரண்ய நகரம் ... | 0 | 8 | 0 |
| வியாபாரநீதி ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீ வாணீ விலாஸினி தனிச்சஞ்சிகை | 0 | 8 | 0 |
| ,, இரட்டைச் சஞ்சிகை 1க்கு | 1 | 0 | 0 |
| ,, 6 நம்பர்கள் அடங்கிய பயிண்டு செய்த வால்யம் ஒன்றுக்கு ... | 3 | 4 | 0 |
| குணசீல ஸ்தலபுராணம் ... | 0 | 8 | 0 |
| ஹனுமான்சிங் ... | 0 | 12 | 0 |
| மெய்யறிவு ... | 0 | 8 | 0 |
| சர்கா ... | 0 | 8 | 0 |
| சுந்தரி ... | 1 | 0 | 0 |
| திருமுருகாற்றுப்படை ... | 0 | 12 | 0 |
| பத்மினி ... | 0 | 3 | 0 |
| ரகுநாதன் ... | 0 | 12 | 0 |
| குணசீலதிருத்தேர் திருப்பணி அகவல் ... | 0 | 2 | 0 |
| விவேகசந்திரிகை ... | 0 | 8 | 0 |
| வஸந்தஸமுத்ரம் ... | 0 | 12 | 0 |
| மங்களாம்பாள் ... | 0 | 8 | 0 |
| ஜினேந்திரன் ... | 1 | 8 | 0 |
| பொன்னுசாமித் தேவர் கொலை | 0 | 14 | 0 |
| ஸ்ரீ வாமன சரித்திரம் | 0 | 2 | 0 |
| மூன்று வைரங்கள் ... | 0 | 6 | 0 |
| தாக்ஷாயிணி ... | 0 | 6 | 0 |
| கலாசுந்தரி ... | 0 | 12 | 0 |
| மதிசூதனன் .. | 0 | 8 | 0 |
| சிவகுமாரன் ... | 1 | 0 | 0 |
| நற்குலதெய்வம் ... | 0 | 8 | 0 |
| மதனமனோஹரி .. | 0 | [illegible] | 0 |
| நவநீதாம்பை ... | 1 | 0 | 0 |
| கோமளவல்லி ... | 0 | 8 | 0 |
| காமேந்திரன் ஞானலோசனி ... | 1 | 0 | 0 |
| கஜபதி ... | 0 | 10 | 0 |
| தியாளன் கதை ... | 0 | 12 | 0 |
| பூர்ணவல்லி கதை ... | 0 | 6 | 0 |

கருவூர் கோயிலின் முன் மண்டபமும் த்வஜஸ்தம்பமும்.



கருவூர் பசுபதீசுவரர் கோயில்.

# கருவூர்

M
...ப.Y.

கருவூர் என்றும் ஆநிலை என்றும் பெயர்வழங்கும் இப்புண்ணியஸ்தலம் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் 45 மைல் தூரத்தில் திருச்சியிலிருந்து ஈரோடு போகும் தென் இந்தியன் ரயில்வே கிளைப்பாதையிலுள்ளது. இது கொங்கு தேசமன்னனாகிய புகழ்ச்சோழனது ராஜதானியாய் விளங்கிற்று. இவ்வரசன் விசேஷ சிவபக்தனாயிருந்து பின்னர் நாயன்மார்கள் கூட்டத்தில் ஈடுபட்டவர். இவ்வூர் பசுபதீசுவரர் கோயிலில் அம்மனுக்கு இரண்டு சந்நிதிகள் இருந்துவருகின்றன—கிருபாநாயகி, சௌந்தரியநாயகி. இவ்வூர் அமராவதி நதியின் கரையிலுள்ளது. இது சேரமன்னர்களது ராஜதானியாயிருந்த காலத்தில் இதற்கு வஞ்சி என்றும் பெயர்வழங்கிவந்தது. அக்காலத்தில் இவ்விடம் கோட்டை மதில்களில் யந்திரங்கள் அமைக்கப்பட்டு எதிரிகளின்மேல் கல், எரி எண்ணை இவைகள் கொட்டவேண்டிய நிமித்தியம் வைக்கப்பட்டிருந்ததாக தமிழ் பிராசின கிரந்தங்கள் தெரிவிக்கின்றன.

## காமதேனு பூஜித்தது.

இவ்வூர் ஈசனை சூரியபகவான் பூஜித்ததிலிருந்து இதற்கு பாஸ்கரபுரமெனவும் பெயருண்டு. ஒருகாலத்தில் காமதேனு இவ்விடம் மூர்த்தியை பூஜித்து பிரம்மாவைப்போல்




கருவூர் கோயில் உள்புரம்.

தானும் உலகத்தை சிருஷ்டிக்கும் மஹிமையைப் பெற்றனள். இந்த வைபவத்திலிருந்தே இதற்கு ஆநிலை என்ற பெயர் உண்டாயிற்று. மேலும் இந்தப்பெருமையை விளக்க இக் கருவூருக்கு வடதிசையிலே வெண்ணெய் மலை என்று ஏற்பட்டுளது.

## நாயன்மார்கள் சரித்திரம்.

நாயன்மார்களில் பெருமை வாய்ந்துள்ள புகழ்ச்சோழர், எறிபத்தர் இருவர்களுக்கும் இவ்வூருடன் ஸம்பந்தம் உண்டு. சோழராஜதானியாகிய உறையூரில் சிதம்பரம் மாடவீதிகளை சிறப்பித்த இரண்டாவது குலோத்துங்கசோழ மஹாராஜனெனப்படும் அநபாயனது குலத்தலைவராய் விளங்கிய புகழ்ச் சோழர் ஆண்டு வரும் காலத்தில் அம்மன்னன் தமது ராஜதானியைச் சேர்ந்த கருவூருக்கு கொங்கு குடகு நாட்டிலுள்ள தமது சிற்றரசர்களிடமிருந்து திறைகளை வாங்க வேண்டிச் சென்றிருந்தனர். இவ்வரசர் விசேஷ சிவபக்தர். கருவூரில் தங்கியிருக்கையில் அவரது பட்டத்து யானை நவராத்திரி அஷ்டமி தினத்தில் நந்தவனத்திலிருந்து புஷ்பங்களை கூடையில் எடுத்து கோயிலுக்குச் சென்ற சிவகாமியாண்டார் என்பவரை எதிர்த்து புஷ்பங்களை பூமியில் சிதறவிட்டது. இதைக் கேட்டு மனம் சகியாத எறிபத்தர் உடனே தமது கையிலிருந்த மழுவால் அந்த யானையையும் அதைப்பின் தொடர்ந்த ஐந்து பாகர்களையும் கொன்றனர். அரசனிடம் இவ்விஷயம் தெரிவிக்கப்பட்டதும் தான் நேரிட ஸ்தலம் போனதும் எறிபத்தர் விசேஷபக்தனென்பதையும் தமது யானை செய்த குற்றத்தையும் கண்டு வியசனமடைந்து எறிபத்தரை புகழ்ந்தே திரும்பினர்.

இக்கருவூரில் தமது சிற்றரசர்களிடமிருந்து கப்பங்களைப் பெற்ற புகழ்ச் சோழர் மலை நாட்டைச் சேர்ந்த அதிகன் என்பவன் மட்டும் தவரின விஷயம் தெரிந்து கொண்டு தமது சைனியத்தை அவனது நாட்டிற்கு அனுப்பினர். அவ்விடம் சென்ற சைனியம்

அதிகனைக் காட்டிற்கு ஓடச் செய்து அவனது சைனியத்தை தோற்கடித்து பொக்கிஷத்துடன் கருவூர் திரும்பினர். இப்படிச சென்றதும் அதிகனுடையவும் அவனது சிப்பந்திகளுடையவும் விசெஷ சிவபக்தியைத் தெரிந்து கொண்ட புகழ்ச் சோழர் இவ்விதம் நேரிட்டசம்பவங்களுக்கு மனம் தளர்ந்து தமது ராஜ்யத்தை புத்திரனிடம் ஒப்பிவைக்கச் செய்து தான் உலகத்தைத் துறந்தரன்.

## கருவூர்த்தேவர் மஹிமை.

சிவன்பேரில் இனிய பாடல்களாகிய திருவிசைப்பாவைப் பாடிய கருவூர்த்தேவர் என்னும் மஹானும் இவ்வூரில் ஜனித்து இவ்விடத்திலேயே முக்தி அடைந்தவர். இவருக்கு இவ்விடம் கோயில் வெளிப்பிராகாரத்தில் ஈசான்யதிசையில் ஒரு ஸந்நிதி இருந்துவருகிறது. இவர் பிராம்மணகுலத்தில் உதித்து சைவரானலும் பாண்டநாட்டிலுள்ள திருககுருகூரை அடைந்ததும் அவ்வூர் விஷ்ணு மூர்த்தி தமது பக்தர்கள் கனவில் தோன்றி இவரை ஆராதிக்கச் செய்தனர். பல அற்புதச் செயல்களைச் செய்தனர். வன்னிமரத்தை மீன்மழை பொழியச் செய்தனர்! பின்னர் பொதியமலை சென்று அகஸ்தியரைத் தொழுது கொண்டிருக்கையில் தஞ்சைப் பெரியகோயிலைக்கட்டிய ராஜராஜதேவர் தனக்கு அக்கோயில் லிங்கத்திற்கு அஷ்டபந்தனம் சாத்த இவரை வரவழைக்கும்படி ஒரு அசரீரி வாக்கு மூல்யமாய்த் தெரிவிக்க அந்தப்படி செய்தனர். பின்னர் பல ஜனங்களுக்கு தயாரிக்கப்பட்டிருந்த ஆகாரத்தை தானே உண்டு எல்லோரது வயிறும் நிரம்பும்படிச் செய்தனர்! ஸ்ரீரங்கத்தில் ரங்கநாதரைத் தொழுது மாணிக்கமாலையைப் பெற்றனர். இவரது மஹிமையை யறியாத பிராம்மணர்கள் இவரது மதாசாரம் குறைவாயிருப்பது பற்றி இவரை தூஷிக்க ஈச்வரன் இவரைக் காப்பாற்றி தமது பக்தனென்று விளக்கச் செய்தனர்.

## சிலாசாஸன விசேஷம்.

சிலாசாஸனங்கள் பல இவ்வூர்க் கோயிலிலுள்ளன. அவைகளில் இவ்வூரை முடிவழங்குசோழபுரமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது அக்காலத்தில் வேங்காலநாட்டைச் சேர்ந்திருந்தது. பல சண்டைகளைப்பற்றிய சோழமன்னர்களது சிலாசாஸனங்கள் இங்கிருந்து வருகின்றன. வீரராஜேந்திரசோழமன்னர் கங்கைகொண்டசோழபுரத்திலிருந்தபடியே இவ்வூர்க் கோயிலுக்கு ஒரு கிராமமளித்ததை அடியில்கண்ட சாஸனம் வெளியிடுகிறது—

தென் இந்திய சாஸனம், 3—ம் புத்தகம், பக்கம் 33.

"ஸ்வஸ்திஸ்ரீ திருவளர திரள்புயத் திருநில வலயந்தன் மணிப்பூணெனத்தங்கிப் பன்மணிக் கொற்ற வெண்குடை நிழற்குவலை யத்துயிர்களைப் பெற்ற தாயிலும் பொமற்றுள்ளவறை கழலரசர் தன்னடியினிலொதுங்கவுறை பிலத்துடைய கலியது வோதுங்க முறைமையிலரும் பெறல் தமையனை முன் வந்தானையிரும் புவிபுகழ் இராஜராஜ னென்றொளிர் மணிமுடி சூட்டி தன் திருமைந்தனாகிய கங்கைகொண்டசோழனை எழுயரியானைச் சேனைச் சோழபாண்டிய னென்றுண்டுயர் மணிமுடிப் பாண்டிமண்டலங்குடுத்தருளிய்

வாட்கை வடிகொண்ட கதிர் வேல் முடிகொண்டசோழனைச் சுந்தர சோழனெனச் சுடர் முடி சூட்டியந்தமில் பெருஞ்சிறப்பருளித்தன் கிளைவருலகத்தவற்குரிய வகலிடம் வேறு வேறளி இகல் வினை விருதொடு மலைக்கும் விக்கலன்றன்னொடும் வெஞ்சிலைத்தடக்கை மாசாமந்தரைக் கங்கபாடிக் களித்திடை னின்று துங்கபத்திரைக்கரை புகத்துரந்து அங்கவர் வேங்கை நாட்டிடை மீண்டவர் விட்ட தாங்கரும் பெருவலித் தண்டு கெடத்தாக்கி மாதண்ட நாயக்கன் சாமுண்டராஜனைச் செற்றவன் சிரத்தினையறுத்து மற்றவனொரு மகளாகிய விருகயக் தேவி நாகலை யென்னுந் தோகையம் சாயலை முகத்தோடு மூக்கு வேருக்கி பகைத்தெதிர் மூன்றும் விசையினும் மென்றெதிர் பொருது பரிமவந் தீர்வதெனக் கருதிப் பொருபுனல் கூடல் சங்கமத்தாகவமல்லன் மகனாகிய விக்கலன் சிங்கணனென்றிவர் தம்மொடும் மெண்ணில் சாமந்தரை வேன்றடு தாக்கி முன்விட்டுத் தன்றனை மன்னருந்தானும் பின்னடுத்திருந்து வடசடலென்ன வகுத்து வந்தானையை கடகளிறொன்றால் கலக்கியுடல் புரிக் கோசலை சிங்கனைக் கொடிப்படை மன்னரைத் தூசி வெண்களிற்றொன் துணித்து கேசவதண்டநாயக்கன் கெத்தரசன் திண்டிறல் மாரயன் ஈறற் பொத்த யனிகல் செய்ப பொற் கோதை மூவேந்தி யென்றூர் தடித்துப் பிலனெக சாமந்தரைச் சின்னபின்னஞ் செய்து பின்னை முதலியாகிய மதுவண ரோட விரித்ததலையோடு விக்கலனோடைச் செருக் கெழிலழிந்து சிங்கணனோட அண்ணல முதலிகளனைவருமமர் பொற் பண்ணின பகடிழிந்தோட னண்ணிய ஆகவமல்லனுமவர்க்கு முன்னோட தன் வேகவெங்களிற்றினை விலக்கிவாகை கொண்டக்கவர் தாரமும்மவர் குலதனமும் சங்குமுன் தொங்கலுந்தாரையும் பேரியும் மேகடம்பமும் வெண்சாமரையும் காக்கைக் கொடியும் மகர தோரணமும் புட்பகப்பிடி போர்க்களிறீட்டமும் பாயமரித் தோரையோடும் பறித்து செய்யொளிர் விசைய மணி மகுடம் மிசை யொடுந் திசை தொறும் சினப்புலி செலுத்திக்குசை கொளுத்தும் புரவிப் பொத்தப்பி வேந்தனை வாரனை வன் கழற் கோளன்றன்னை ஜனநாதன் றம்பியைப் போர்களத்தலங்கல் சூழ்ப் பசுந்தலை யரிந்து பொலங்கழல்த் தென்னனை ஸ்ரீவல்லபன் மகன் சிறுவனை மின்னவில் மனிமுடி வீரகேசரியை கதகடகளிற்றாலுதைத் திட்டு மதகொடு செயித்து வாப்பாகாச் செங்கோல் செலுத்தி வேத நீதியை விளக்கி மீதுயர் வீரத் தனிக் கொடித் தியாகக் கொடியோடும் எற்பவர் வருகென்று நிற்ப போர்த்தொழிலுரிமையிலெய்தி அரிசு வீற்றிருந்து மெவரு மனுநெறி விளங்கிடக் கோ இராசகேசரிபன்மரான உடையார் ஸ்ரீவீரராஜேந்த்ரதேவற்கு

கெங்கைகொண்டசோழபுரத்துக் கோயிலுள்ளால் திருமஞ்சன சாலையில் எழுந்தருளியிருந்து உதகம் பண்ணியருளின அதிராஜராஜமண்டலத்து வேங்காலநாட்டுப் பாக்கூர் வெள்ளான் வகையிலிறை முதல் தவிர்த்து யாண்டு ங-வது கெதிராவது முதல் இவ்வூர் இறையிலி தேவதானம் திருநமத்துக்காணியாக இறைபுறவு சிற்றாயம் எலவை யுகவை மன்றுபாடு தெண்ட குற்றம் உடும் பொடி ஆமை தவழி புற்றும் எழுவன முளைப்பன கற்றுப்புற் பெக்காமுற் சூட்டும்.

இவ்வூர் இறை கட்டின காணிக்கடன் பொன் முன்னூற்று முக்கழஞ்சரையே மஞ்சாடி அரைமாவும் நெல்லு முவ்வாயிரத்து அனூற்று முப்பத்தொரு கலனே தூணியும்

இன்னாட்டுக் கருவூர்த் திருவாநிலை மஹாதேவற்கு இறுப்பதாக யாண்டு முதல் இறையிலி தேவதானம் திருநாமத்துக்காணியாக வரியிலிடத்திருவாய்மொழிந்தருளினபடிக்கு

திருவாய்மொழிந்தருளினரென்று திருமந்திர ஓலை க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு நெர்வாயிலுடையான் தாழி திருப்பனங்காடுடையான் வானவன் பல்லவரையனெழுதினாலும் திருமந்திர ஓலைநாயகம் அச்சுதன் இராஜராஜனான தொண்டைமானும் ஊரன் உத்தம சோழனான இராஜராஜப்ரஹ்மாதிராயனும் அரையன் இராஜராஜனான வீரராஜேந்திர மூரிநாடாழ்வானும் வீரராஜேந்திர மங்கலப் பேரரையனும் இவர்களுடன் ஒப்பிட்டுப் புகுந்த கேழ்விப்படியே நம் வரியிலிட்டுக் கொள்கவென்ன வீரபத்திரன் தில்லை விடங்கனான வில்லவராஜராஜன் ஏவ இவன் ஏவினபடியே உடன் கூட்டத்து அதிகாரிகள் க்ஷத்திரியசிகாமணி வளநாட்டு பனையூர் நாட்டு ஜயங்கொண்ட சோழநல்லூருடையான் உதைய திவாகரன் கூத்தாடுவானான வீரராஜேந்திர மூவராயரும் வீரராஜேந்திரப்ரஹ்மாதிராயரும் அருமொழிதேவ வளநாட்டு நென்மலிநாட்டு பெரியகுடையூர் அரங்கன் திருச்சிற்றம்பலமுடையானான வானவன் மூவேந்திர வேளானும் அதிராசராசவளநாட்டு தேவூர்நாட்டு பனைக்குடியுடையான் காடன் வீதிவிடங்கனான ஜயங்கொண்டசோழ விழுப்பரையரும் விசைய ராஜேந்திரவளநாட்டு புலியூர் நாட்டுப் பூண்டியுடையான் அத்தாணிச் சியாரூரன் முடிவிழுப்பரையனும்.........இராஜேந்திரஹட்டரும் இராஜராஜப்பாண்டி குலவளநாட்டு உத்தமசோழவளநாட்டு முள்ளிநாட்டு நிகரிலிசோழநாட்டு மகிமங்கலத்து கொச்சாக்காற்புறத்து விண்ணவநாராயணஹட்டனும் விடையில் அதிகாரிகள் உய்யக்கொண்டானும இப்படி.........திருவாய்மொழிந்தருளின படிக்கு நம் வரியிலார்வரியிலே இட்டு இறையிலி தேவதானம் திருநாமத்துக் காணியாகத் திருவாநிலை மஹாதேவற்கு அவி பெலி அற்சனா போகததுக்குச் சேம்பிலும் கல்லிலும் வெட்டிக்கொள்க.........

மற்றொருசாஸனம் (தென்இந்திய சாஸனம், 3ம் புத்தகம், 47ம் பக்கம்) இவ்வூர் கம்மாளர்களுக்கு அரசன் கொடுத்த அதிகாரங்களைக்குறிப்பிடுகிறது:—

ஸ்வஸ்தி ஸ்ரீ த்ரிஹுவனச்சக்ரவத்திகள் ஸ்ரீ கோநேரின்மை கொண்டான் வெங்காலநாட்டுக் கண்மாளற்கு யடு வது ஆடி மாதம் முதல் தங்களுக்கு நன்மை திண்மைகளுக்கு இரட்டைச் சங்கும் ஊதி பேரிகை உள்ளிட்டவை கொட்டுவித்துக் கொள்ளவும். தாங்கள் புறப்படவேண்டும் இடங்களுக்கு பாதரக்ஷை கோத்துக்கொள்ளவும். தங்கள் வீடுகளுக்குச் சாந்து இட்டுக் கொள்ளவும் சொந்நோம்.

இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதாகத் தங்களுக்கு வேண்டின இடங்களிலே கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்க.

இவை விழுப்பாதராயன் எழுத்து.

இக்கருவூரே ஆதியில் சேரமன்னர்களது ராஜதானியாயிருந்தது. தென்னிந்தியா பண்டையகாலம்துவக்கி சேர, சோழ, பாண்டியமன்னர்களுக்குள் அடங்கியிருந்தது மன்னியில் அது மேனாடு, கீழ்நாடு, தென்னாடு எனவும் மலைநாடு, நீர்நாடு, கடல்நாடு எனவும், முறையே வழங்கப்பட்டுவந்தது. இம்மூன்றுநாடுகளிலுமேசெந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு அடங்கியுள்ளது. இவ்விரண்டுள் செந்தமிழ்நிலம் ஒன்று கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டு. முன்னதாகிய செந்தமிழ் வழங்கியது வையையாற்றின்வடக்கும் கருவூரின்கிழக்கும் மருதயாற்றின் தெற்கும், மருவூரின்மேற்குமே. பின்னதாகிய கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டும் இச்செந்தமிழ்நிலத்தைச் சூழ்ந்திருந்தன. அவையாவன: பொங்கர் நாடு, ஒளிநாடு, தென்பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, பன்றிநாடு, கற்காநாடு, சிதநாடு, பூழிநாடு, மலைநாடு, அருவாநாடு, அருவாவடதலை. இக்கொடுந்தமிழ் நிலத்தை சூழ்ந்திருந்த நாடுகளாவன:—சிங்களம், பழ்ந்தீவு, கொல்லம், கூபம், கொங்கணம், துளுவம், குடகம், கருநடம், கூடம், வருகம், தெலுங்கு, கலிங்கம்.

சேரமன்னனது கொடுந்தமிழ் நாட்டைச்சேர்ந்த குட்டநாடு, குடநாடு, பூழிநாடு மலைநாடு. ஆனதுபற்றியே இவருக்கு 'குட்டுவன்', 'குடவர்கோமான்', 'பூழியர் கோமான்', 'மலையன்', 'மலையமான்' என தமிழ்நூல்களில் சொல்லப்பட்டுள்ளன.

நாட்டைப்போலவே மலைகளும் அவரவர்களுக்கு தனிமையில் குறிப்பிடப்பட்டிருந்தன. கொல்லி சேரனுதாகவும், நேரி சோழருதாகவும், பொதியம் பாண்டியனுதாகவும் விவரிக்கப்பட்டுளது. இச்சேரரது தலைநகரமாயுள்ள இக்கவூருக்கு வஞ்சி எனப்பெயர் ஏற்பட்டிருந்தது. ஏனெனில் இவ்வூருள்ளவிடம் வஞ்சிவன மெனவும், வஞ்சுளாரணிய மெனவும் வழங்கப்பட்ட தின் நிமித்தியர். ஸம்ஸ்கிருதத்தில் இவ்வஞ்சிமரத்தையே வேதஸம், வாநீரம் எனச்சொல்லுகிறார்கள்.

பாண்டியனுக்கு வையாநதியும், சோழனுக்கு காவிரியும்போல் இச்சேரனுக்குப் பெருமை உண்டாக்கும் நதி பொருநையே. இப்படியே மதுரைமாநகர் பாண்டியனுக்கும், உரையூர் சோழனுக்கும் கருவூர் சேரனுக்கும். இவ்விடங்களில் அக்காலத்தில் வழங்கிவந்த விழாவாவன: மதுரையில் அவணிஅவிட்டமும், உறையூரில்பங்குனியுத்திரமும், இக்கருவூரில் உள்ளிவிழாவுமே. உள்ளிவிழாவாவது: கொங்காமணியை அறையில் கட்டிக்கொண்டு தெருவில் ஆடுதல். இப்படியே சேரர்க்கு வீரமுரசு, சோழர்க்கு தியாகமுரசு, பாண்டியர்க்கு நியாய முரசம். கொடியோவெனில் சேரர்க்கு வில், சோழர்க்கு புலி, பாண்டியனுக்கு மீன்.

குழித்தலைக்கு மேற்கில் பன்னிரண்டுமைல் தூரத்திலுள்ள மதுக்கரையிலுள்ள செல்லியம்மன் கோயிலே சேரருக்கும் சோழனுக்கும் எல்லையாயுள்ள விடத்தைக்குறிப்பிட்டது. இவ்விடம் மாரியம்மன் கோயில் இப்பொழுதும் விசேஷமகிமையுடையது. இவ்விடத்திலிருந்து தெற்கில் ஒநகறையும் எல்லைக்கறையாக ஏற்பட்டிருந்தது. கருவூருக்கு பன்னிரண்டுமைல் வடமேற்கிலுள்ள வேட்டைமங்கல மெனப்படும் ஊரே அக்காலத்தில் சேர

மன்னர்களுக்கு வேட்டையாடும் ஸ்தலமாக குறிப்பிடப்பட்டிருந்தது. பின்னர் வெகுகாலம் சென்றுதான் சேரர்கள் கருவூரைவிட்டு மேற்கு சமுத்திரக்கரையிலுள்ள திருவஞ்சைக் களத்திற்குச் சென்றனர்.

## கரபுரம், வீரசோழபுரம் எனப்பட்டதின் விவரம்

திரிசிரன் திரிசிரபுரத்தை தன் பெயரால் உண்டாக்கி ஆண்டகாலத்தில் அதன்பக்கம் ஐம்பதுமைல் தூரத்திலுள்ள இக்கருவூரை தான் கைப்பற்றிக்கொண்டதுபற்றி இதற்கு கரபுரமென பெயர் ஏற்பட்டது. இதன் விவரம் கருவூர்ஸ்தலபுராணம், சூளாமணி இவைகளில் தெரிவிக்கப்பட்டுளது.

"கஞ்சனெண்ணுதி புரங் கரபுரம் பாற்கரபுரம்வீரசோழபுரம்
வஞ்சுளாரணியம் வஞ்சிதாயூர்சண்மங்கள கேத்திரங்கருவூர்
விஞ்சுறுகருப்பபுரிமுதனமம் விளங்குதொல்பதியின்வீற்றிருக்கும்
செஞ்சுடப் பொருளினிருபதமேனைத்தேவர் பொன்முடிக்கனிகலனே.

(கரூர் ஸ்தலபுராணம்.)

மழைக்கரும்புக் கொடிமுல்லைமருங்கேறவரம்பனைத்துதடாவி நீண்ட
கழைக்கரும்பு கண்ணீனுங் கரபுரத்தார் கோமாளிக்கதிர்வேற்காளை
தழைக்கரும்பு மிளமுலையா யெரிக்கக்கதிரோன் வழிமருகனி வனீரீர்த்தண்
தழைக்கரும்பின்முருகுயிர்க்குந்தாரகலஞ் சார்ந்தவர்கடவஞ்சாரே.

(சூளாமணி.)

ஸ்தலபுராணச்செய்யுளில் ஆதிபுரம் எனச் சொல்லப்பட்டிருப்பதிலிருந்து தான் இவ்விடம்வருவதற்கு முன்னர் அப்பெயராலேயே இவ்வூர் வழங்கிவந்திருக்க வேண்டும். பின்னர் வீரசோழன் ஆண்டகாலம் துவக்கி வீரசோழபுரம் என்றழைக்கப்பட்டிருக்கலாம்.

## அருணகிரிநாதர் பாடியது

கோவூர், ஆனூர், கோநகர், திருநகர் எனப்பலபெயர்களால் காமதேனுவால் சுவாமி பூஜிக்கப்பட்டதைக் கொண்டு அழைக்கப்பட்ட இவ்வூர் ஈசுவரியை இவர் "கோகுலசக்தி" எனக்குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

"வெற்றிப்பொடியணிமேனியர் கோதுல
சத்திக்கிடமருள்தாதகி வேணியர்
வெற்புப் புரமது நீறெழல் காணிய—ரருள்பாலா
வெற்புத்தட முலையாள் வனிநாயகி
சித்தத்தமர்குமாரா வெண்மையாள்கோன
வெற்றிப்புகழ் கருவூர்தனின்மேவிய பெருமாளே.

# தேவாரப் பாடல்கள்.

**திருஞானசம்பந்தர் பாடியது :—**

## பண்—இந்தளம்

தொண்டெலாமலர் தூவியேத்த நஞ், சுண்டலாருயிராய தன்மையர்
கண்டனார் கருவூருளானிலை, அண்டனா ரருளீயுமன்பரே. 1

நீதியார் நினைந்தாய் நான்மறை, ஓதியாரொடுங் கூடிலார் குழைக்
காதினார் கருவூருளானிலை, ஆதியாரடியார் தமன்பரே. 2

விண்ணுலா மதி சூடி வேதமே, பண்ணுளார் பரமாய பண்பினர்
கண்ணுளார் கருவூருளானிலை, அண்ணலாரடியார்க்கு நல்லரே. 3

முடியர் மும்மதயானை யீருரி, பொடியர் பூங்கணை வேளைச்செற்றவர்
கடியுளார் கருவூருளானிலை, அடிகள் யாவையுமாய வீசரே. 4

பங்கயம் மலர்ப்பாதர் பாதியோர், மங்கையர் மணி நீலகண்டர் வான்
கங்கையர் கருவூருளானிலை, அங்கையோடரவத்தமண்ணலே. 5

தேவர் திங்களும் பாம்புஞ் சென்னியில், மேவர்மும்மதிலெய்த வில்லியர்
காவலர் கருவூருளானிலை, மூவராகிய மொய்ம்பரல்லரே. 6

பண்ணினார் படியேற்றர் நீற்றர் மெய்ப், பெண்ணினார் பிறை தாங்கு நெற்றியர்
கண்ணினார் கருவூருளானிலை, நண்ணினார் நமையாளு நாதரே. 7

கடுத்த வாளரக்கன் கயிலையை, எடுத்தவன்றலை தோளுந் தாளினால்
அடர்த்தவன் கருவூருளானிலை, கொடுத்தவன்னருள் கூத்தனல்லனே. 8

உழுதுமாநிலத்தேன மாகிமால், தொழுது மாமலரோனுங்காண்கிலார்
கழுதினான் கருவூருளானிலை, முழுதுமாகிய மூர்த்தி பாதமே. 9

புத்தர் புன்சமணாதர் பொய்யுரைப், பித்தர் பேசிய பேச்சை விட்டு மெய்ப்
பத்தர் சேர் கருவூருளானிலை, அத்தர் பாதமடைந்து வாழ்மினே. 10

கந்தமார் பொழிற் காழி ஞானசம், பந்தன் சேர் கருவூருளானிலை
எந்தையைச் சொன்ன பத்தும் வல்லவர், சிந்தையிற்றுயராய தீர்வரே. 11

# நெரூர்.

இது கரூருக்கு வடமேற்கில் 7 மைல் தூரத்தில் காவேரியின் தென்கரையிலுள்ளஒரு அழகிய அக்கிரஹாரம். இந்த இடத்தில் தான் தென்னிந்தியாவின் மிகக்கியாதிபெற்ற ராஜயோகியாயும் ஸித்தபுருஷராயுமிருந்த ஸதாசிவ பிரம்மத்தின் ஸமாதி இருக்கிறது. இந்த ஸதாசிவேந்திரர் பூர்வாசிரமத்தில் திருவிசநல்லூர் கிராமத்தைச்சேர்ந்தவர். பால்யத்திலிருந்தேரொம்பவும் விரக்தராயிருந்தவர். கல்யாணமாகுமுன்னமேயே இல்லறம் துறந்து வெளிக்கிளம்பினர். பரமசிவேந்திர ஸரஸ்வதியென்னும் பெரியவரிடம் ஸன்யாஸம் பெற்றனர். எப்பொழுதும் பிரம்மத்தினிடத்திலே லயித்து ஆநந்தத்தில் மூழ்கினவராய் சரீரத்தையே மறந்து ஸ்வேச்சையாய் திரிந்தனர். இவர் சுமார் 150 வருஷங்களுக்கு முந்தித்தானிருந்தவராதலால் இவரது அத்புத செயல்களனேகம் பரம்பரையய் வெளிவந்திருக்கின்றன. இவர் ஒரே ஸமயத்தில் பலவிடங்களில் பலருக்கு தர்சனம் கொடுத்தனர். ஒரு ஸமயம் இவர் ஸ்வேச்சையாய் மெய்மறந்து திரிகையில் ஒரு துலுக்கனின் அந்தப்புரம் இறங்கியிருந்த கூடாரத்துக்குள் நுழைந்துவிட்டார். உடனே அத்துலுக்கன் கோபபரவசனாய் தன் கத்தியை உருவி இம்மஹானது கையில் ஒன்றை வெட்டிவிட்டான். கை துண்டாய் கீழே விழுந்தும் கூட அதை கொஞ்சமேனும் லக்ஷ்யம் செய்யாமல் இவர் ஆனந்தமாகப் பாடிக்கொண்டு சென்றார். இதைக்க

ஸ்ரீ ஸதாசிவ பிரும்மேந்திராளின் ஸமாதி.

ண்டதும் அத்துலுக்கனுக்குண்டான ஆச்சர்யத்துக்கு ஓர் எல்லையில்லை. இவர் யாரோ பெரிய மஹானென்று தெரிந்துகொண்டு கீழே கிடந்த இவரது கையையும் எடுத்துக்கொண்டு இவர் பின்னுடியே ஏழுநாள் இராப்பகலாய் தொடர்ந்தான். ஏழாவதுநாள் ஸதாசிவேந்திரர் அத்துலுக்கனைத் திரும்பிப் பார்த்து ஏன் பின் தொடருகிறாயென்று கேட்க அதற்கவன் பெரிய அபராதம் செய்துவிட்டேன். க்ஷமித்தருளவேண்டுமென்றான். அப்பொழுதும் என்ன அபராதம் செய்தாயென்று கேட்டார். கையை வெட்டிவிட்டேனென்று சொன்னதும் யாருடைய கையையென்றார். இது அவனுக்கு இன்னுமாச்சரியத்தைக்கொடுத்தது. தங்களுடையதுதானென்றதும் அந்த கையை மறுபடி சேர்த்துவைக்கச்சொல்லி தமது மற்றொரு கரத்தால் தடவிக்கொடுத்தார். உடனே கை முன்போலாய்விட்டது. இதைக்கண்ட துலுக்கன் அவர் காலில் விழுந்து அதை கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தன்னை உஜ்ஜீவிக்கச்செய்யவேண்டுமென்று மன்றாடினான். பிறகு அவனை அநுக்ரஹித்துவிட்டுச்சென்றார். இம்மாதிரி இவரது மஹிமைகள் கணக்கிலடங்கா. புதுக்கோட்டை தொண்டமான் மஹாராஜாவும் இவரநுக்ரஹத்தால்தான் ராஜ்யம் பெற்றனர். ஆதலால்தான் நெரூரிலுள்ள இவர் ஸமாதிக்கு பூஜை முதலியவைகளின் செலவுக்கு புதுக்கோட்டை ஸம்ஸ்தானத்திலிருந்தே இன்றைக்கும் கொடுக்கிறார்கள். புதுக்கோட்டை அரண்மனை பூஜையிலும் இவர் பிம்பம் தானுளது. இம்மஹானின் ஸமாதி இருப்பதால் இவ்வூருக்கு பல பெரியவர்கள் வருகிறார்கள். இதற்குமுன் சிருங்ககிரி பீடத்தை அலங்கரித்த ஸ்ரீஸச்சிதானந்த சிவாபிநவ நிருஸிம்ஹ பாரதீஸ்வாமிகளுக்கு இம்மஹானிடத்தில் அதிகமான கௌரவபுத்தி உண்டு. அவர்கள் இரண்டு தடவை இவ்விடத்திற்கு வந்து இவர் ஸமாதியை தர்சனம் செய்திருக்கிறார்கள். இவர்களது உருவப் படத்தையும் இவர்கள் ஸமாதியின் படத்தையும் இதில் பதிப்பித்திருக்கிறோம்.

ஸ்ரீ ஸதாசிவ பிரம்மேந்திராள்.



திருமழவாடி கோயில் கோபுரமும், மண்டபமும்.

# திருமழவாடி.

இந்த ஸ்தலம் திருவையாற்றிலிருந்து வடமேற்கில் மூன்று மைல் தூரத்தில் உள்ளது. இவ்விடத்தில் கொள்ளிட நதி உத்தராவாகினியாய்ச் செல்லுகிறது' எப்பொழுதும் புண்ணிய நதிகள் ஒரு திக்கிலிருந்து மற்றொரு திக்கில் மாறிச் செல்லுமிடத்திற்கு விசேஷம் அதிகம். அநேகமாய் அவ்விடத்தில் அந்த நதியில் ஸ்நாநம் செய்வது விசேஷ பலனை அளிக்கும். முக்கியமாய் அவ்விடங்களிலுள்ள மூர்த்தியின் பெருமையும் அதிகமே.

## பலர் பூஜித்தது.

இவ்விடத்தில் அக்னி பகவானை ஈச்வரன் நிருத்தம் செய்யச் சொல்லி அந்தப்படி அவர் செய்தது பற்றி மழுவாடி எனப்பட்டது பின்னர் மழபாடி என்று எற்பட்டது. நந்திகேச்வரர் இவ்விடத்தில்தான் ஸுயசாதேவியை விவாஹம் செய்து கொண்டது. இப்பொழுதும் பங்குனி மாதத்தில் இத்திருக்கல்யாணம் நடைபெறுகிறது. விஷ்ணுவும் இந்திரனும் கூட இவ்விடமுள்ள ஈச்வரனைப் பூஜித்துள்ளார்கள். இவ்விடம் கோயிலிலுள்ள ஸோமாஸ்கந்த மூர்த்தி சிலா மூர்த்தமாய் எற்பட்டிருப்பது ஒரு விசேஷம். ஸ்தலவிருக்ஷமான பனை கோயில் பிராகாரத்திலிருந்துவருகிறது.



திருமழுவாடி கோயில் பிராகாரமும், மண்டபமும்.

## ஸ்தலத்தின் விசேஷம்.

ஸ்தலபுராணப்படி பிரளயகாலத்தில் சிவபெருமான் காசி, சிதம்பரம், தாலவனம் எனப்படும் திருமழுவாடி இம் மூன்று ஸ்தலங்களையும் தாங்கி ரக்ஷிக்கிறார். இவ்விடமுள்ள ஸ்வயம்பு வச்சிரலிங்கம் சிறந்ததுமன்னியில் காவேரி நதியில் இவ்விடம் ஸ்நானம் விசேஷமானது. வேதவியாஸர் தனக்கு நேரிட்டிருந்த வாதநோய் இவ்விடம் வந்து நீங்கப் பெற்றனர். முன்னொரு காலத்தில் இவ்விடம் கோயில் பலிபீடத்தில் போடப்பட்டிருந்த பலியை ஒரு கழுகு வந்து சாப்பிட யத்தனிக்கையில் அதை ஒரு வேடன் அம்பினால் எய்ய அது இறந்ததும் ஈச்வரன் அதற்கு மோக்ஷமளித்தார். இன்னும் அக்கழுகின் பரம்பரை கோயில் கோபுரத்தில் வசித்து வருகிறது! புருஷாமிருக முனிவர் பிரம்மாவினுடைய ஆத்ம பூஜையிலிருந்த வச்சிரலிங்கத்தைப் பெற்று அதை இவ்விடத்தில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்வித்தார். மார்க்கண்டேயர் ஒரு விசாக பௌர்ணமி அன்றையதினம் இவ்விடம் வந்து மழுவின் நடனத்தை தெரிசித்தனர். பாண்டிய நாட்டின் கண்ணுள்ள சோழவந்தான் கிராமத்திலுள்ள லம்படரென்னும் பிராம்மணரின் புத்திரரான சுஷேணன் மஹாபாதகங்களைச் செய்தாலும் இவ்விடம் கோயிலிலுள்ள சிவகங்கையில் ஸ்நானத்தால் மோக்ஷமடைந்தான். சந்திரன் தக்ஷனால் க்ஷயமடையுமாறு பெற்ற சாபத்தை இவ்விடம் வந்து பதினைந்து தினம் அனுபவித்து அதன் பிறகு பதினைந்து தினமும் நாளுக்கு நாள் கிரமமாக விருத்தி அடையப்பெற்றதின் நிமித்தயம் சுவாமிக்கு வைத்யநாதரென்று பெயருண்டாயிற்று. சூரியபகவான் மற்றைய ஜனங்களில் பாபிகளும தன்னை தரிசித்து பாபத்தைத் தீர்த்துக்கொண்டு அதனால் தனக்கு நேரிட்ட உபத்திரவத்தை இவ்விடம் பகவானை தரிசித்து நீக்கிக் கொண்டனர். லக்ஷ்மி ஒரு ஸமயம் நாராயண

னைப் பிரிந்து லாலுகுடி என்றும் திருத்தவத்துறையில் சிவனைக் குறித்து யோகத்தில் அமர்ந் திருக்கையில் விஷ்ணு தானும் சிவனும் ஒன்றே என்பதைக் காட்டவேண்டி அவரை இந்த ஸ்தலத்தில் பூஜித்துத் தனது சரீரத்தின் வலது பாதியை அவருக்கு அளித்து இவ்விரண்டு சரீரமும் ஒன்ருகிய சங்கரநாராயணரை இந்த ஸ்தலத்திற்கு ஆக்கினேய திக்கில் ஆறேகால் குரோச தூரத்திலுள்ள தஞ்சை சிவகங்கை தீர்த்தக்கரையில் எப்பொழுதும் பிரசன்னமாகி ஜனங்களின் மனோபீஷ்டத்தை நிறைவேற்ற உத்தேசம் கொண்டனர். பார்க்கவமுனிவரால் நேரிட்ட சாபத்தை அக்னிபகவான் இவ்விடம் மூர்த்தியைப் பூஜித்து நிவிர்த்தித்துக் கொண்டனர்.

## நந்திகேச்வரர் பெருமை.

சிலாதகர் திருவையாற்றில் தமது தவ மகிமையால் நந்திகேச்வரரைப் புத்திரராய்ப் பெற்றவர் இவ்வூரில் வஸிஷ்டருக்கும் அருந்ததிக்கும் உண்டான ஊர்மிளா தேவியை மீனமாஸம் சுக்லபக்ஷம் சுக்கிரவாரம் புனர்வஸு நக்ஷத்திரத்தில் மணந்தார். இப்பொழுதும் வருஷாவருஷம் இந்தத் திருக்கலியாணத்தைக் கொண்டாடத் திருவையாற்றிலிருந்து நந்திகேச்வரர் இவ்விடம் போகிற ஐதிஹ்யம் கொண்டாடப்படுகிறது.

## சிலா சாஸன விசேஷம்.

சிலாசாஸனங்கள் இக்கோயிலில் பல உள்ளன. அவைகளின்படி இவ்வூர் பொய்கை நாட்டைச் சேர்ந்திருந்தது. இதற்கு ஜீனசிந்தாமணிநல்லூர் எனப் பெயர் ஏற்பட்டிருந்தது. முதலாவது ராஜராஜசோழன் காலத்தில் (கி-பி-985-1013) கர்ப்பகிருஹம் புதுப்பிக்கப்பட்டதுமன்னியில் பின்னர் அவனது மகன் ராஜேந்திரசோழன் காலத்தில் (1012-1053) இந்த கர்ப்ப கிருஹத்தின் மேலுள்ள விமானம் வேலை செய்யப்பட்டதுமன்னியில் ஏற்கனவே அதிலிருந்த சிலாலிகிதங்களும் புஸ்தகத்தில் குறிக்கப்பட்டுப் பின்னரும் வரையப்பட்டது. ஹொய்சலமன்னர் நரஸிம்மனிடம் அதிகாரம் வகித்த வல்லயர் என்பவர் இவ்விடத்தில் ஒரு ஸந்நிதி ஏற்படுத்தினர். திருவாதிரைக் காலத்தில் ஜனங்களுக்குப் போஜனமளிக்கவும் அவல் நிவேதனம் செய்யவும் நிதி வைக்கப்பட்டது. தினப்படி காவேரி நதியிலிருந்து சுவாமிக்கு அபிஷேகஜலம் கொண்டுவர பூமிதானமளிக்கப்பட்டது. மலை மண்டலத்தைச்சேர்ந்த ஏரானபுரத்திலுள்ள ஒரு வியாபாரி மூன்ருவது பிராகாரத் தெற்கு கோபுரவாசலில் கிணர் இறக்கித் தண்ணீரைத் தொட்டியில் கட்டி கோயிலுக்குள் செல்லும் ஜனங்களை கால் அலம்பிக் கொள்ள நிலம் வாங்கிவைத்தனர். சகம் 1412ல் ராஜாகண்ட கோனேரி ராயன் ஒரு மண்டபம் கட்டி வைத்தனர். பாண்டியமன்னர் குலசேகரர் காலத்தில் நாற்பத்தெண்ணுயிரநம்பி எனப்படும் நெற்குப்பை உடையான் ஆராவமுது பெரியாயன் பிக்ஷாடன மூர்த்தியை பிரதிஷ்டை செய்து வைத்தனன். ராஜேந்திரசோழன் காலத்தில் மாசி சஷ்டியிலும் ஆனி அஷ்டமியிலும் சந்தர்ப்பணம் நடக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ராஜராஜதேவன் காலத்தில் எதிரிலிச்சோழ மூவேந்தராயர் இக்கோயிலைக் காத்துவர நியமிக்கப்பட்டவர் கோயிலை விஸ்தரித்து சில மண்டபங்களையும் கட்டிவைத்தனர். வீரபாண்டிய தேவமஹாராஜன் காலத்தில் விரைநாடு ஜனங்கள் பெரியநட்டான் திருமதிலை

யும், சில மண்டபம், பிராகாரங்களையும் புதுப்பித்தார்கள். அடியில் கண்ட விக்கிரசோழ தேவர் சாசனம் அவரது இரண்டு பட்டமஹிஷிகளின் பெயரையும் அவர் சிம்பாசனமேறினதையும் குறிப்பிடுகிறது—

தென் இந்திய சிலாசாஸனங்கள். 3-ம் புத்தகம் பக்கம் 182—184

ஸ்வஸ்தி ஸ்ரீ பூமாலை மிடைந்து பொன்மாலை திகழப் பாமாலை மலிந்த பருமணித்திரள் புயத் திருநில மடந்தையோடு ஜெயமகளிருப்பதக் கனவரை மார்வந் தநதெநப் பெற்றுத் திருமகளொரு தநியிருப்பக் கலைமகள் சொற்றிறம் புணர்ந்த கற்பினளாகி விருப்பொடு நாவகத் திருப்ப திசை தொறுந் திகிரியொடு செங்கோல் நடப்ப அகில புவனமுங் களிப்பதோர் புதுமதி போல் வெண்குடை மீமிசை நிழற்ற கருங்கலியொளித்து வங்பிலத்திடை கிடப்பக் குளத்திடைத் தெலுங்க வீமன் விலங்கல் மிசை யேறவுங் கலிங்க பூமியைக் கநரி பருகவும் ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கியும் வேங்கை மண்டலத் தாங்கிநி திருந்து வடதிசை வடிப்படுத்தருளி தெந் திசைத் தருமமுந் தவமுந் தானமுந் தழைப்ப வேதமும் மெய்ம்மையுமாதியுகம் போலத் தலைத்தலைச் சிறப்ப வந்தருளி வெலற்கரும் போற்புலியாணை பார்த்திவர்சூட நிறை மணி மகுடம் முறைமையிற் சூடி மன்னுயிர்க் செல்லாமின்னுயிர்த்தாய் போலத் தன்னளி பரப்பித் தனித்தனி பார்த்து மண்முழுதுங் களிப்ப மநுநெறி வளர்த்து தங் கோயிற் கொற்ற வாசல் புறத்து மணி நா வொடுங்க முரசுகள் முழங்க விசையமும் புகழும் மென்மேலோங்க வாழி வாழி இம்மாநிலங் காக்கத் திருமணி பொற்றேட்டெழுது பத்தாண்டு வருமுறை முந்நே மந்நவர் சுமந்து திறை நிரைத்துச் சொரிந்த செம்பொற் குவையால் தங்குல நாயகந் தாண்டவம் பயிலுஞ் செம்பொந் நம்பலஞ் சூழ் திருமாளிகையும் கோபுரவாசல் கூடசாலைகளும் உலகு வலங்கொண்டொளி விளங்கு நேமிக்குலவரை உகைய குன்றமோடு நின்றெனப் பசும் பொந் மேய்ந்து பலி வளர் பீடமும் விசும்பொளி தழைப்ப விளங்கு பொந் மேய்ந்து இருநிலந்தழைப்ப இமையவர்களிப்ப பெரிய திருநாள் பெரும்பியர் விழா வெறும் உயர் புரட்டாதி உத்திரட்டாதியில் அம்பல நிறைந்த அற்புதக் கூத்தர் இந்பர் வாழ எழுந்தருளுவதற்குத் திருத்தேர்க்கோயில் செம்பொன் மேய்ந்து பருந்திரள் முத்தின் பயில்வடம் பரப்பி நிறைமணி மாளிகை நெடுந்திருவீதி தந திருவளர் பியரால்ச் செய்து சமைத்தருளி பைம்பொற்குழித்த பரிகல முதலால் செம்பொற் கற்பகத்தோடு பரிச்சிந்நமும் அளவிளாதநவொளி பெற வமைத்துப் பத்தாமாண்டில் சித்திரைத்திங்கள் அத்தம் பெற்ற ஆதித்தவாரத்துத் திருவளர் மதியின் த்ரயோதசிப் பக்கத்து இந்ந பலவும் இநிது சமைத்தருளி ஒரு குடை நிழற் கீழ் தல முழுதுங் களிப்பச் சேழியர் வெஞ்சுரம் புக சேரலர் கடல் புக அழிதரு சிங்களர் அஞ்சி நெஞ்சலமர கங்கர் திரையிடக் கந்நடர் வெந்நிட கொங்கரொதுங்க கொங்கணர் சாயமற்றெத்திசை மந்நருந் தந்தமக்காணென திருமலர்ச் சேவடி உரிமையிலிறைஞ்ச ஆங்கவந் மகிழுந் கங்கையொப்பாகிய தெரிவையர் திலதந் தநீாகபதாகை புரிகுழல் மடப்பிடி புனிதகுணவநிதை திரிபுவனமுழுதுடையாள் அவந் திருவுளத்தருள் முழுதுமுடையாளெனவுடநிருப்ப ஊழியுந் நெடுமாலாகத்துப் பிரியாதென்றுந் திருமகளிருந்ததென மாதர்மடமயில் மூதலத்தருந்ததி அரணிய கற்பிற் தரணிமுழுதுடையாளவந் திருமார்வத்தருளொடு மிருப்

பச் செம்பொற் வீரஸிம்ஹாஸநத்து திரிபுவனமுழுதுடையாளோடும் வீற்றிருந்தருளிய கோப்பர கேஸரிவர்மரான திரிபுவனச் சக்ரவர்த்திகள் ஸ்ரீவிக்கிரமசோழதேவற்கு யாண்டு ௰௨ ஆவது திரிபுவனமுழுதுடைவளநாட்டுப் பொய்கைநாட்டு உடையார் திருமழுவாடி உடையார் கோயிலில் ஆதிசண்டேஸ்வரதேவர் ஆதேசம் அருளால் இக்கோயிலில் ஸ்ரீமாஹேஸ்வரரோமும் ஸ்ரீகாரியஞ் செய்வாரும் இக்கோயில் கணக்கு நெல்குப்பையுடையாநும் உள்ளிட்ட ஸ்வரநத்தோம் எழுத்து.........

---

## தேவாரப் பாடல்கள்.

திருஞானஸம்பந்தர் பாடியது:—

### இரண்டாம் திருமுறை—பண்—இந்தளம்.

களையும்வல்வினையஞ்சனெஞ்சேகருதார்புர முளையும்பூசல்செய்தானுயர்மால்வரைநல்விலா
வளையவெஞ்சரம்வாங்கியெய்தான்மதுத்தும்பிவண்டலையுங்கொன்றையந்தார்மழபாடியுளண்ணலே. 1

காச்சிலாதபொன்னோக்குங்கனவயிரத்திர ளாச்சிலாதபளிங்கினனஞ்சுமுன்னாடினன்
பேச்சினாலுமக்காவதென்பேதைகாள்பேணுமின் வாச்சமாளிகைசூழ்மழபாடியைவாழ்த்துமே. 2

உரங்கெடுப்பவனும்பர்களாயவர்தங்களைப் பரங்கெடுப்பவனஞ்சையுண்டுபகலோன்றனை
முரண்கெடுப்பவன்முப்புரந்தீயெழச்செற்றுமுன்வரங்கொடுப்பவன்மாமழபாடியுள்வள்ளலே. 3

பள்ளமார்சடையிற்புடையேபடையப்புனல் வெள்ளமாதரித்தான்விடையேறியவேதியன்
வள்ளன்மாமழபாடியுண்மேயமருந்தினை யுள்ளமாதரிமின்வினையாயினவோயவே. 4

தேனுலாமலர்கொண்டுமெய்த்தேவர்கள்சித்தர்கள் பானெயஞ்சுடனாட்டமுன்னாடியபால்வணன்
வானநாடர்கள்கைதொழுமாமழபாடியெங்கோனைநாடொறுங்கும்பிடவேகுறிகூடுமே. 5

தெரிந்தவன்புரமூன்றுடன்மாட்டியசேவகன் பரிந்துகைதொழுவாரவர்தம்மாம்பாவினன்
வரிந்தவெஞ்சிலையொன்றுடையான்மழபாடியைப்புரிந்துகைதொழுமின்வினையாயினபோகுமே. 6

கந்தவார்குழலாளுமைதன்னொருகூறுடை யெந்தையானிமையாதமுக்கண்ணினனெம்பிரான்
மைந்தன்வார்பொழில்சூழ்மழபாடிமருந்தினைச் சிந்தியாவெழுவார்வினையாயினதேயுமே. 7

இரக்கமொன்றுமிலானிறையான்றிருமாமலை யரக்கையாலெடுத்தான்றனதோண்முடிபத்திற
விரற்றலைந்நிறுவியுமையாளொடுமேயவன் வரத்தையேகொடுக்கும்மழபாடியுள்வள்ளலே. 8

ஆலமுண்டமுதமமரர்க்கருளண்ணலார்காலனாருயிர்வீட்டியமாமணிகண்டனார் 9
சாலநல்லடியார்தவத்தார்களுஞ்சார்விட மாலயன்வணங்குமழபாடியெம்மைந்தனே.

கலியின்வல்லமணுங்கருஞ்சாக்கியப்பேய்களு நலியுநாள்கெடுத்தாண்டவென்னாதனார்வாழ்பதி
பலியும்பாட்டொடுபண்முழவும்பலவோசையு மலியுமாமழபாடியைவாழ்த்திவணங்குமே. 10

மலியுமாளிகைசூழ்மழபாடியுள்வள்ளலைக் கலிசெய்மாமதில்சூழ்கடற்காழிக்கவுணியன். 11

### மூன்றாம் திருமுறை—பண்—கொல்லி.

காலையார்வண்டினங்கிண்டியகாருறு, சோலையார்பைங்கிளிசொற்பொருள்பயிலவே
வேலையார்விடமணிவேதியன்விரும்பிட, மாலையார்மதிதவழ்மாமழபாடியே. 1

கறையணிமிடறுடைக்கண்ணுதனண்ணிய, பிறையணிசெஞ்சடைப்பிஞ்ஞகன்பேணுமூர்
துறையணிகுருகினந்தூமலர்துதையவே, மறையணிநாவினன்மாமழபாடியே. 2

அந்தணர்வேள்வியுமருமறைத்துழனியுஞ், செந்தமிழ்க்கீதமுஞ்சீரினல்வளர்தரப்
பந்தணைமெல்விரலாளொடும்பயில்விட, மந்தம்வந்துலவுசீர்மாமழபாடியே. 3

அந்தியினுரிதனையழகுறப்போர்த்தவன், முத்தியாய்மூவரின்முதல்வனாய்நின்றவன்
பத்தியாற்பாடிடப்பரிந்தவர்க்கருள்செயு, மத்தனுருறைவிடமணிமழபாடியே. 4

கங்கையார்சடையிடைக்கதிர்மதியணிந்தவன், வெங்கண்வாளரவுடைவேதியன்றிதிலாச்
செங்கயற்கண்ணுமையாளொடுஞ்சேர்விட, மங்கைமார்நடம்பயின்மாமழபாடியே. 5

பாலனாருயிர்பாங்கினாலுணவருங், காலனாருயிர்செகக்காலினாற்சாடினன்
சேலினார்கண்ணினாடன்னொடுஞ்சேர்விட, மாலினார்வழிபடுமாமழபாடியே. 6

விண்ணிலாரிமையவர்மெய்ம்மகிழ்ந்தேத்தவே, யெண்ணிலார்முப்புரமெரியுணநகைசெய்தார்
கண்ணினாற்காமனைக்கனலெழக்காய்ந்தவெம், மண்ணலாருறைவிடமணிமழபாடியே. 7

கரத்தினாற்கயிலையையெடுத்தகாரரக்கன, சிரத்தினையூன்றலுஞ்சிவனடிசரணெனு
இரத்தினாற்கைந்நரம்பெடுத்திசைபாடலும், வரத்தினன்மருவிடமாமழபாடியே. 8

ஏடுலாமலர்மிசையயனெழின்மாலுமாய், நாடினார்க்கரியசீர்நாதனாருறைவிடம்
பாடெலாம்பெண்ணையின்பழம்விழப்பைம்பொழின் மாடெலாமல்குசீர்மாமழபாடியே. 9

உறிபிடித்தூத்தைவாய்ச்சமணொடுசாக்கியர், நெறிபிடித்தறிவிலாநீசர்சொற்கொள்ளன்மின்
பொறிபிடித்தரவினம்பூணெனக்கொண்டமோன், மறிபிடித்தானிடமாமழபாடியே. 10

ஞாலத்தாராதிரைநாளினானொடோறுஞ், சீலத்தான்மேவியதிருமழபாடியை
ஞாலத்தான்மிக்கசீர்ஞானசம்பந்தன்சொற், கோலத்தார்பாடுவார்குற்றமற்றார்களே. 11

## மூன்றும் திருமுறை—பண்—கோல்லி.

அங்கையாரழலன்னழகார்சடைக், கங்கையான்கடவுள்ளிடமேவிய
மங்கையானுறையும்மழபாடியைத், தங்கையாற்றொழுவார்தகவாளரே. 1

விதியுமாம்விளைவாமொழியார்ந்ததோர் கதியுமாங்கசிவாம்வசியாற்றமா
மதியுமாம்வலியாமழபாடியுள், நிதியந்தோய்சடைநாதனற்பாதமே. 2

முழவினன்முதுகாடுறைபேய்க்கணக், குழுவினன்குலவுங்கையிலேந்திய
மழுவினானுறையும்மழபாடியைத், தொழுமினுந்துயரானவைதீரவே. 3

கலையினன்மறையான்கதியாகிய, மலையினன்மருவார்புரமூன்றெய்த
சிலையினன்சேர்திருமழபாடியைத், தலையினல்வணங்கத்தவமாகுமே. 4

நல்வினைப்பயனன்மறையின்பொருள், கல்வியாயகருத்தனுருத்திரன்
செல்வன்மேயதிருமழபாடியைப், புல்கியேத்துமதுபுகழாகுமே. 5

நீடினாருலகுக்குயிராய்நின்று, ஆடினானெரிகானிடைமாநடம்
பாடினாரிசைமாமழபாடியை, நாடினார்க்கில்லைநல்குரவானவே. 6

மின்னினாரிடையாளொருபாகமாய், மன்னினானுறைமாமழபாடியை
பன்னினாரிசையால்வழிபாடுசெய், துன்னினார்வினையாயினவோயுமே. 7

தென்னிலங்கையர்மன்னன்செழுவரை, தன்னிலங்கவடர்த்தருள்செய்தவன்
மன்னிலங்கியமாமழபாடியை, யுன்னிலங்கவுறுபிணியில்லையே. 8

திருவினாயகனுஞ்செழுந்தாமரை, மருவினானுந்தொழத்தழன்மாண்பம
ருருவினானுறையும்மழபாடியைப், பரவினார்வினைப்பற்றறுப்பார்களே. 9

நலியுநன்றறியாச்சமண்சாக்கியர், வலியசொல்லினுமாமழபாடியு
ளொலிசெய்வார்கழலான்றிறமுள்கவே, மெலியுநம்முடன்மேல்வினையானவே. 10

மந்தமுந்துபொழின்மழபாடியு, ளெந்தைசந்தமினிதுகந்தேத்துவான்
கந்தமார்கடற்காழியுண்ஞானசம், பந்தன்மாலைவல்லார்க்கில்லைபாவமே. 11

---

அப்பர் என்கிற திருநாவுக்கரசுசுவாமிகள் பாடியது :—

## ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்.

நீறேறுதிருமேனியுடையான்கண்டாய் நெற்றிமேலொற்றைக்கணிறைந்தான்கண்டாய்
கூறாகவுமைபாகங்கொண்டான்கண்டாய் கொடியவிடமுண்டிருண்டகண்டன்கண்டா
யேறேறியெங்குந்திரிவான்கண்டாயேழுலகுமேழ்மலையுமானான்கண்டாய்
மாறானார்தம்மரணமட்டான்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 1

கொக்கிறகுசென்னியுடையான்கண்டாய் கொல்லைவிடையேறுகூத்தன்கண்டா
யக்கரைமேலாடலுடையான்கண்டா யனலங்கையேந்தியவாதிகண்டா
யக்கொடரவமணிந்தான்கண்டாயடியார்கட்காரமுதமானான்கண்டாய்
மற்றிருந்தகங்கைச்சடையான்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 2

நெற்றித்தனிக்கண்ணுடையான்கண்டாய்நேரிழையோர்பாகமாய்நின்றான்கண்டாய்
பற்றிப்பாம்பாட்டும்படிறன்கண்டாய்பல்லூர்பலிதேர்பரமன்கண்டாய்
செற்றார்புரமூன்றுஞ்செற்றான்கண்டாய்செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மற்றொருகுற்றமிலாதான்கண்டாய் மழபாடிமன்னுமணாளன்றானே. 3

அலையார்ந்தபுனற்கங்கைச்சடையான்கண்டா யண்டத்துக்கப்பாலாய்நின்றான்கண்டாய்
கொலையானகூற்றங்குமைத்தான்கண்டாய்கொல்வேங்கைத்தோலொன்றுடுத்தான்கண்டாய்
சிலையாற்றிரிபுரங்கள்செற்றான்கண்டாய் செழுமாமதிசென்னிவைத்தான்கண்டாய்
மலையார் மடந்தைமணாளன்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 4

உலந்தார்தமங்கமணிந்தான்கண்டாயுவகையோடின்னருள்கள்செய்தான்கண்டாய்
நலந்திகழுங்கொன்றைச்சடையான்கண்டாய்நால்வேதமாறங்கமானான்கண்டா
யுலர்ந்தார்தலைகலனாக்கொண்டான்கண்டாயும்பரார்தங்கள்பெருமான்கண்டாய்
மலர்ந்தார்திருவடியென்றலைமேல் வைத்தமழபாடிமன்னுமணாளன்றானே. 5

தாமரையான்றன்றலையைச்சாய்த்தான்கண்டாய்தகவுடையார்நெஞ்சிருக்கைகொண்டான்கண்டாய்
பூமலரானேத்தும்புனிதன்கண்டாய் புணர்ச்சிப்பொருளாகிநின்றான்கண்டா
யேமருவுவெஞ்சிலையொன்றேந்திகண்டா யிருளார்ந்தகண்டத்திறைவன்கண்டாய்
மாமருவுங் கலைகையிலேந்திகண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 6

நீராகிநெடுவரைகளானான்கண்டாய்நிழலாகிநீள்விசும்புமானான்கண்டாய்
பாராகிப்பௌவமேழானான்கண்டாய்பகலாகிவானாகிநின்றான்கண்டா

யாரேனுந்தன்னடியார்க்கன்பன்கண்டாயணுவாகியாதியாய்நின்றான்கண்டாய்
வாரார்ந்தவனமுலையாள்பங்கன்கண்டாய்மழபாடிமன்னுமணாளன்றானே. 7

பொன்னியலுந்திருமேனியுடையான்கண்டாய் பூங்கொன்றைத்தாரொன் றணிந்தான்கண்டாய்
மின்னியலும்வார்சடை யெம்பெருமான்கண்டாய்வேழத்தினுரிவிரும்பிப்போர்த்தான்கண்டாய்
தன்னியல்பார்மற்றொருவரில்லான்கண்டாய் தாங்கரியசிவந்தானாய் நின்றான்கண்டாய்
மன்னிய மங்கை யோர்கூ றன்கண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 8

ஆலாலமுண்டுகந்த வாதிகண்டா யடையலர்தம்புரமூன்று மெய்தான்கண்டாய்
காலாலக்காலனையுங் காய்ந்தான்கண்டாய் கண்ணப்பர்க் கருள்செய்த காளைகண்டாய்
பாலாருமொழிமடவாள் பாகன்கண்டாய் பசுவேறிப்பலிதிரியும் பண்பன்கண்டாய்
மாலாலுமறிவரிய மைந்தன்கண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 9

ஒருசுடராயுலகேழு மானான்கண்டா யோங்காரத் துட்பொருளாய் நின்றான்கண்டாய்
விரிசுடராய்விளங்கொளியாய் நின்றான்கண்டாய்விழவொலியும் வேள்வொலியு மானான்கண்டா
யிருசுடர்யீதோடா விலங்கைக்கோனை யீடழியவிருபதுதோ ளிறுத்தான்கண்டாய்
மருசுடரின்மாணிக்கக்குன்றுகண்டாய் மழபாடிமன்னு மணாளன்றானே. 10

## ஆறாம் திருமுறை—திருத்தாண்டகம்

அலையடுத்தபெருங்கடனஞ்சமுதாவுண்டு அமரர்கடந்தலைகாததவையர்செம்பொற்
சிலையெடுத்துமாநாகநெருப்புக்கோத்துத்திரிபுரங்கடீயிட்டசெல்வர்போலு
நிலையடுத்தபசும்பொன்னான்முத்தாநீண்ட நிரைவயிரப்பலகையாற்குவையார்த்துற்ற
மலையடுத்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 1

அறைகலந்தகுழன்மொந்தைவீணையாழுமந்தரத்திற்கந்தருவரமரரேத்த
மறைகலந்தமந்திரமுநீருங்கொண்டுவழிபட்டார்வானாளக்கொடுத்தியன்றே
கறைகலந்தபொழிற்கச்சிக்கம்பமேயகனவயிரத்திரடூணேகலிசூழ்மாட
மறைகலந்தமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 2

உரங்கொடுக்கு மிருண்மெய்யர்மூர்க்கர்பொல்லாவூத்தைவாய்ச்சமணர்தமையுறவாக்கொண்ட
பரங்கெடுத்திங்கடியேனையாண்டுகொண்டபவளத்தின்றிரடூணேபசும்பொன்முத்தே
புரங்கெடுத்துப்பொல்லாதகாமனாகம் பொடியாகவிழித்தருளிப் புவியோர்க்கென்றும்
வரங்கொடுக்கு மழபாடிவயிரத்தூணே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 3

ஊனிகந்தூணுறிகையர்குண்டர்பொல்லாவூத்தைவாய்ச்சமணருறவாகக்கொண்டு
ஞானகஞ்சேர்ந்துள்ள வயிரத்தைநண்ணாயேனைப் பொருளாகவாண்டுக்கொண்ட
மீனகஞ்சேர் வெள்ளநீர்விதியாற்குடும்வேந்தனே விண்ணவர்தம்பெருமான்மேக
வானகஞ்சேர்மழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 4

சிரமேற்ற நான்முகன்றன் றலையுமற்றைத் திருமால்தன்செழுதலையும்பொன்றச்சிந்தி
யுரமேற்றவிரவிபற்றகர்த்துச்சோமனொளிர்கலைகள்படவுழக்கியுயிரைநல்கி
நரையேற்றவிடையேறிநாகம் பூண்டநம்பியையேமறைநான்குமோலமிட்டு
வரமேற்குமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 5

சினந்திருத்துஞ்சிறுபெறியார்துண்டர்தங்கள்செதுமதிபார்தீவினைக்கேவிழுந்தேன்றேடிப்
புனந்திருத்தும்பொல்லாதபிண்டிபேணும் பொறியிலியேன்றனைப்பொருளாவாண்டுக்கொண்டு

தனந்திருத்துமவர்திறத்தையொழியப்பாற்றித்தயாமூலதன்மவழியெனக்குநல்கி
மனந்திருத்துமழபாடிவயிரத்தூணே யென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 6

சுழித்துணையாம்பிறவிவழித்துக்கநீக்குஞ்சுருள்சடையெம்பெருமானேதூயதெண்ணீ
ரிழிப்பரியபசுபாசப்பிறப்பைநீக்குமென்றுணையே யென்னுடையபெம்மான்றம்மான்
பழிப்பரியதிருமாலுமயனுங்காணாப்பரிதியேசுருதிமுடிக்கணியாய்வாய்த்த
வழித்துணையாமழபாடிவயிரத்தூணேயென்றென்றேநானரற்றிநைகின்றேனே. 7

---

சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடியது :—

## ஏழாம் திருமுறை—பண்—நட்டராகம்.

பொன்னார்மேனியனேபுலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேல்மிளிர்கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியேமழபாடியுள்மாணிக்கமே
யன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. 1

கீளார்கோவணமுந்திருநீறுமெய்பூசியுன்றன்
றாளேவந்தடைந்தேன்றலைவாவெனையேன்றுகொணீ
வாளார்கண்ணிபங்காமழபாடியுள்மாணிக்கமே
கேளாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 2

எம்மானெம்மனையென்றெனக்கெட்டனைச்சார்வாக
ரிம்மாயப்பிறவிப்பிறந்தேயிறந்தெய்த்தொழிந்தேன்
மைம்மாம்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யெம்மானின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 3

பண்டேநின்னடி யேனடியாரடியார்கட் கெல்லாம்
தொண்டேபூண் டொழிந்தேன் றொடாமைத்துரிசறுத்தேன்
வண்டார் பூம்பொழில்சூழ் மழபாடி யுள்மாணிக்கமே
அண்டாநின்னையல்லாலினியாரை நினைக்கேனே. 4

கண்ணாயேழுலகுங்கருத்தாயஅருத்தமுமாய்ப்
பண்ணாரின் தமிழாய்ப்பரமாயபரஞ்சுடரே
மண்ணார்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யண்ணாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 5

நாளார்வந்தணுகிநலியாமுனநின்றனக்கே
யாளாவந்தடைந்தேனடியேனையுமேன்றுகொணீ
மாளாநாளருளுமழபாடியுள்மாணிக்கமே
யாளாநுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. 6

சந்தாரும்குழையாய்ச்சடைமேற்பிறைதாங்கிநல்ல
வெந்தார்வெண்பொடியாய்விடையேறியவித்தகனே
மைந்தார்சோலைகள்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யெந்தாய்நின்னையல்லாலினியாரைநினைக்கேனே.

வெய்யவிரிசுடரோன்மிகுதேவர்கணங்களெல்லாஞ்
செய்யமலர்களிடமிகுசெம்மையுள்நின்றவனே
மையார்பூம்பொழில்சூழ்மழபாடியுள்மாணிக்கமே
யையாநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 8

நெறியேநின்மலனேநெடுமாலயன்போற்றிசெய்யுங்
குறியேநீர்மையனேகொடியேறிடையாள்தலைவா
மறிசேரங்கையனேமழபாடியுள்மாணிக்கமே
யறியேநின்னையல்லாலினியாரைநினைக்கேனே. 9

ஏரார்முப்புரமுமெரியச்சிலைதொட்டவனை
வாரார்கொங்கையுடன்மழபாடியுள்மேயவனைச்
சீரார்நாவலர்கோனூரனுரைத்ததமிழ்
பாரோரேத்தவல்லார்பரலோகத்திருப்பாரே. 10



# கங்கைகொண்டசோழபுரம்.

முன்னொரு காலத்தில் சோழ ராஜாக்களின் ராஜதானியாயிருந்து பிரஸித்திபெற்றிருந்த இந்நகரம் தற்காலம் ஒரு சிறு கிராமமாய்த் திரிச்சிராப்பள்ளி ஜில்லாவைச் சேர்ந்ததாயும் தென் இந்தியா ரயில்வேயிலுள்ள ஆடுதுறை ஸ்டேஷனிலிருந்து போகக்கூடிய இடமாயுமிருக்கிறது. ஆடுதுறையிலிருந்து வடமேற்கில் பதினைந்து மைலுக்கு அப்பாலுள்ளது. கும்பகோணத்திலிருந்து வடக்கில் 24 மைல் தூரமுள்ளது. இவ்விருபாதையும் அணைக்கரை (Lower Anicut) மார்க்கமாய்ச் செல்லுகிறது.

இதற்கு இப் பெயர் உண்டானது கி. பி. 1012–ல் முதலாவது ராஜேந்திர சோழன் வடக்கில் கங்காநதி தீரம் வரை படை எடுத்துச்சென்று அவ்விடமிருந்து ஜலத்தை எடுத்து வந்து இந்த ஊரின் கோயிலிலுள்ள சிங்கக் கிணற்றில் விட்டதுபற்றி என்று சொல்லலாம். இவன் இதன் நிமித்தமே "கங்கைகோண்டான்" என்று பட்டப் பெயரையும் வகித்தான். அதற்கு முன் "முடிகோண்ட சோழபுரம்" என்று இவ்வூருக்குப் பெயர் வழங்கியிருந்ததாகச் சிலாசாஸனங்களிலிருந்து தெரியவருகிறது. "முடிகொண்ட சோழன்" என்றும் இந்த ராஜேந்திரசோழனுக்குப் பட்டப்பெயருண்டு.

ஜல வஸதி.

இந் நகரத்திற்கு ஜல ஸௌகரியத்திற்கு மேற்கில் 16–மைல் நீளமுள்ள பொன்னேரி என்று ஒரு பெரிய தடாகமுண்டு. அதற்கு ஜலம் பாய்ச்சக் கால்வாய்கள் கொள்ளிடநதியிலிருந்தும் வெள்ளாற்றிலிருந்தும் கருங்கல்லால் கட்டப்பட்டிருந்தன. அவைகள்

அழிந்து போனாலும் இன்னும் சில சின்னங்கள் அங்குமிங்கும் தற்காலத்தில் வெட்டிப் பார்த்தால் தெரியவருகின்றன.

## கோயில் விவரம்.

இப்பொழுது இருக்கும் கோயில் ராஜேந்திர சோழராஜனால் கி. பி. 1012–42ல் கட்டப்பட்டது. விமானம் கர்ப்பகிருஹம் முழுமையும் தஞ்சாவூர்க் கோயிலைப்போல் கருங்கல்லாலேயே கட்டப்பட்டு மேலே சுதையால் பூசப்பட்டிருக்கிறது. இப்பொழுது ஒரு பிராகாரம் மட்டுந் தான் இருந்து வருகிறது.

அம்பாள் ஸந்நிதி ஏற்கனவே 'பள்ளிவாடி' என்ற இடத்தில் வடக்கே ஒரு மைல் தூரத்தில் இருந்ததாகவும் பிறகு துலுக்கர் காலத்தில் மந்திரியாயிருந்த ஆவுடைப்பிள்ளை உத்திரகைலாசமென்று சொல்லப்படும் ஸந்நிதியிலுள்ள விசுவநாதர் விசாலாக்ஷி ஸ்தானத்தில் அந்த அம்மனைக்கொண்டுவந்து பிரதிஷ்டை செய்ததாகவும் சொல்லுகிறார்கள். இதே மாதிரி தென் பிராகாரத்திலுள்ள தக்ஷிண கைலாஸ ஸந்நிதியில் ராமநாதசுவாமி பர்வதவர்த்தினி அம்மன் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்றன. இந்த முதல் பிராகாரத்தில் ஈசான்ய திக்கிலுள்ள 'சிவகங்கை' யெனப்படும் சிங்ககிணற்றின் உள்ளே செல்லப் பல படிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிங்க உருவம் இந்தக் கிணற்றின் முகத்திற்கு ஏற்பட்டமை சோழர்களுக்கு உரித்தான சிங்கக்கொடிபற்றியிருக்கலாம்.

இக்கோயில் தேவாரத்தில் சம்பந்தப்படாவிட்டாலும் கருவூர்த்தேவரால் திருவிசைப்பாவில் பாடப்பட்டுளது. மூல லிங்கம் மிகப் பெரியது. இதன் ஆவுடையார் சுமார் 70 முழம் சுற்றளவுடையது. கர்ப்பகிருஹ சமீபத்தில் இரண்டு குகைத்துவாரங்கள் மூடப்பட்டிருக்கின்றன.

இங்கு முக்கிய உத்ஸவம் பங்குனி மாதம் உத்திர நக்ஷத்திரத் தன்றையதினம் நடைபெறுகிறது. முற்காலங்களில் பிரம்மோத்ஸவம் எப்பொழுது நடத்தப்பட்டதென்ற விஷயம் தெரியவில்லை. இந்த லிங்கம் பாணாசுரனுக்கு அவனது ஆயிரம் கைகளினாலும் பூசிக்கவேண்டி ஈசுவரனால் கொடுக்கப்பட்டதென்றும் அதை எடுத்துச் செல்லுகையில் இவ்விடம் வைத்ததும் இந்த இடத்திலேயே அது ஸ்தாபிதமானதாகவும் அதன் நிமித்தம் இவ்விடம் கோயில் கட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது. ஒரு சோழராஜா இவ்விடத்திலுள்ள லிங்கத்தில் ஆவிர்ப்பவித்திருக்கும் மூர்த்தி தன்னுடன் பேசவேண்டுமென்று வேண்ட, அந்தப்படி அம்மூர்த்தியைச் செய்யவேண்டுமானால் அந்த லிங்கத்தின் ஆக்ருதிக்குத் தக்கபடி விமானம் மற்றைய பரிவார சிலா முகூர்த்தங்கள் ஏற்படவேண்டுமென்று கோயில் குருக்கள் தெரிவித்தாராம். அவ்விதம் ராஜா செய்வித்ததின்பேரில் அந்த ராஜாவுடன் குருக்கள் எதிரில் லிங்கத்திலுள்ள மூர்த்தி பேசினதாகவும், இதை மறுபடியும் அதிகமாக விஸ்தரித்துப் பரவச் செய்யாமலிருக்கும்படியாக அந்த க்ஷணமே அக்குருக்களை ஊமையாக ஈசுவரன் செய்துவிட்டதாகவும் பிறகு அவரது ஸந்ததிக்குக் கூட "ஊமைக் குருக்கள்" வம்சமென்று வழங்கினதாகவும் தெரியவருகிறது.




கங்கைகொண்ட சோழபுரம் விமானம்.

தற்காலமுள்ள பிராகாரத்தின் சுவர் மதிலில் எல்லாத் திக்குகளிலும், (கோயில் பார்க்கும் கிழக்கு தவிர) கோணங்களிலும் பெரிய பீரங்கிகள் ஆதி காலத்தில் வைத்திருந்திருக்கவேண்டும். ஏனெனில் இப்பொழுதும் சில சில பாகங்களில் 25--அடி உயரமும் 50—அடி சுற்றளவுமுள்ள கருங்கல்லால் கட்டப்பட்ட வட்டமான பீரங்கி மேடைகளிருந்து வருகின்றன. கி. பி. 1838—ம் வருஷத்தில் கொள்ளிட நதிக்குப் பாலம் கட்ட இந்த பீரங்கி மேடைகள், உப்பரிகைகள் இவைகளிலுள்ள கருங்கற்களை இடித்து நமது ஆங்கில

கவர்ண்மெண்டார் எடுத்துப்போனதாகக் கோயிலாரிடம் தஸ்தாவேஜிகள் இருந்துவருகின்றன.

காப்பக்கிருஹ விமானம் சுமார் 175 அடி உயரமுள்ளது. இது முழுமையும் கருங்கல்லாற் கட்டப்பட்டது. விமானத்திலுள்ள சிலா பிம்பங்கள் கூடக் கருங்கல்லில் செயயப்பட்டவை. இவை அபூர்வமான வேலைப்பாடுடையன.



கங்கைகொண்ட சோழபுரம் கோயிலின் கர்ப்ப கிருஹத்தின் தெற்குப்பக்கத்தியபடிகள்.

## அபூர்வ சிலைகள்.

கர்ப்பகிருகத்திலும் அதன் முன்னுள்ள மண்டபத்திலும் வெளிச்சுவர்களில் ஸப்தரிஷி, ஈசுவரரின் பல லீலா பிமபங்கள் வெகு அழகாய்ச் செதுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் சண்டேசுவர நாயனருக்கு ஈசுவரன் பார்வதி ஸமேதராய்த் தன்னுடைய நிர்மால்யமாலையை முடி சூட்டும் பிம்பம் எவரும் கண்டு களிப்படையக்கூடியது.

இந்த முதல் பிராகாரம் 600 அடி நீளம் 400-அடி அகலத்தின் வெளியில் ஏற்கனவே இந்த சுவர் கோட்டைச் சுவர் மாதிரியாக பிரங்கி வைக்க மேடைகளுடன் இருந்துவந்தன. அதன் சின்னத்தை இப்பொழுதும் தென்கிழக்கு மேற்கு ஸ்தானங்களில் காணலாம்.

ஏற்கனவே இருந்த தேர்முட்டி இப்பொழுது "மண்மேடு" என்னும் ஸ்தானத்தில் கிழக்கே ஒருமைல் தூரத்திலிருக்கிறது. இதற்குத் தக்கவாறு கோயில் நான்கு திக்குகளிலும் 'கரைமேடு' என்று பல மேடுகளிருந்துவருகின்றன.

## நவக்கிரக பிம்பம்.

இக்கோயிலிலுள்ள நவக்கிரக பிம்பம்அபூர்வமானது. இம்மாதிரி இத் தென்னிந்தியாவில் நாம் காணமாட்டோம். ஒரே கல்லில் தேர் மாதிரியாகச் செதுக்கப்பட்டு நான்கு சக்கரங்களுடனும் ஏழு குதிரைகள் பூட்டியதாய் மேற்கு திக்கு நோக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சூரியன் மட்டும் பத்மதளமாய் மண்டலாகாரமாய் மேலிருக்க சனி பகவான் குதிரைகளை சாரதியாக நடத்துகிறார். மற்றைய ஏழு கிரகங்களும் தேரின் மூலைகளில்

இருந்து வருகிறார்கள். இது ஒவ்வொருவரும் பார்த்து அதிசயிக்கத் தக்கது.

இதன் சமீபத்தில் விசேஷ சில்பவேலைப் பாடுள்ள மஹிஷாஸுரமர்த்தனி அம்மன் சிலை அமையப்பெற்றுளது.

மஹிஷாஸுரமர்த்தனி

அரண்மனை.

அரண்மனை கோயிலுக்குத் தென்மேற்கில் ஒரு மைல் தூரமுள்ள "மாளிகை மேடு" என்னும் ஸ்தானத்தில் இருந்திருக்கவேண்டும். இந்த அரண்மனைத் திடலில் உள்ள விநாயகருக்குக் "கணக்குப் பிள்ளையார்" என்று பெயர். இம்மூர்த்தி கோயில் கட்டிவரும் ஸமயம் கணக்கு எழுதும் ராஜ சிப்பந்திகளின் சிரமத்தைக் குறைத்தனராம். இதன் வடக்கில் ஒரு மைலில் "உட்கோட்டை" இருந்ததாகத் தெரிய வருகிறது கிழக்கில் மெய்காவல் தெரு என்று (இப்பொழுதும் பெயர் வழங்கி வரும்) ஸ்தானம் ஏற்பட்டிருக்கிறது. மேலும் இப்பொழுது யுத்த பள்ளம், ஆயுதக்களம், இடைக்கட்டு, சுண்ணும்புக்குழி, தொட்டிக் குளம், கழுநீர்க் குளம், வண்ணங்குழி, கட்டியக்காரன் குளம், வீரசோழம் என்னும் பெயர்கள் பல பல ஸ்தலங்களுக்கு இடப்பட்டிருப்பதிலிருந்து அந்த ஸ்தானத்தில் அரண்மனை பிரபலமாயிருந்த காலத்தில் அந்தத் தொழிலாளிகள் வஸித்திருக்கவேண்டுமென்று திண்ணமாய்ச் சொல்லலாம்.



கங்கைகொண்ட சோழபுரம் கர்ப்பக்கிருஹத்தின் வடபக்கம்

சிலாசாஸனம்.

இவ்விடம் அரண்மனையிலிருந்து இராஜேந்திரசோழன் தஞ்சைக்கோயில் பூஜை செய்பவருக்கு தானம் கொடுத்த விஷயம் தஞ்சை கோயிலிலுள்ள "தென்இந்தியா சாஸனங்கள்" 2 ம் புத்தகம் 106 பக்கத்திய சாஸனத்தால் வெளியாகிறது:—

கங்கைகொண்ட சோழபுரத்தின் கோட்டை பீரங்கிமேடை.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமன்னி வளர இருநிலமடந்தையும் பொற்சயப்பாவையும் சீர்த்தனிச் செல்வியுந்தன் பெருந்தேவியராகி இன்புற நெடுதியல் ஊழியுள் இடைதுறை நாடும் துடர்வன வேலிப்படர் வனவாசியும் சுள்ளிச் சூழ்மதிள் கொள்ளிப் பாக்கையும் நண்ணற்கருமுரண் மண்ணைக் கடக்கமும் பொருகடலீழத்தரைசர்தம்முடியும் ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த சுந்தரமுடியும் இந்திர ஞாரமும் தெண்டிரை ஈழமண்டலமுழுவதும் எறிபடைக் கேரளர் முறைமையிற் சூடுங்குல தனமாகிய பலர் புகழ் முடியும் செங்கதிர்மாலையும் சங்கதிர் வேலைத் தொல் பெருங்காவற் பல பழந்தீவும் செருவிற் சினவி இருபத்தொருகாலரசுகளை கட்ட பரசுராமன் மேவருஞ் சாந்திமத்தீவரண் கருதி இருத்திய செம்பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கன் அளப்பரும் புகழொடும் பீடியல் இரட்ட பாடி ஏழரை இலக்கமும் நவநெதிக்குலப்பெருமலைகளும் விக்கிரமவீரர் சக்கரகோட்ட முதிரபடவல்லை மதுரமண்டலமும் காமிடைவள நாமணைக்கோணையும் வெஞ்சினவீரர் பஞ்சப்பள்ளியும் பாசடைப்பழனமாசுணிதேசமும் அயர்வில்வண்கீர்த்தி ஆதிநகரவையில் சந்திரன் றொல்குலத்திந்திரரதனை விளை அமர்க்களத்துக்கிளையொடும் பிடித்துப்பலதனத் தொடு நிறைகுலதனக்குவையும் கிட்டருஞ்செறிமிளை ஒட்டவிஷயமும் பூசுரர்சேர் நற் கோசலைநாடும் தருமபாலனை வெம்முனையழித்து வண்டுறைசோலைத் தண்டபுத்தியும் இரண சூரனை முரணுகத்தாக்கித் திக்கணைக்கீர்த்தித் தக்கணலாடமும் கோவிந்தசந்தன் மாவிழிந் தோடத் தங்காதசால் வங்காளதேசமும் தொடுகழற் சங்குவொட்டல் மயிபாலனை வெஞ் சமர்விளாகத் தஞ்சுவித்தருளி யொண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங்கடலுத்திரலாடமும் வெறிமலர்த் தீர்த்தத் தெறிபுனல் கங்கையும் அலைகடல் நடுவுட

பல்கலஞ் செலுத்திச் சங்கிராம விசையொத்துங்க வந்மனாகிய கடாரத் தரைசனை வாகயம் பொருகடல் கும்பக்கரியொடு மகப்படுத்துரிமையில் பிறக்கிய பெருநெதி பெருக்கமும் ஆர்த்தவனகனகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிரத் தோரணமும் மொய்த்தொளிர் புனை மணிப்புதவமும் கனமணிக்கதவமும் நிறைசிர் விசையமும்துறைநீர்ப்பன்னையும் வன்மலையூ ரெயிற் றொன்மலையூரும் ஆழ்கடலகழ்சூழ் மாயிருடிங்கமும் கலங்காவல்வினை இலங்காசோ கமும் காப்புறுநிறைபுனல் மாப்பப்பாளமும் காவலம்புரிசை மேவிலிம்பங்கமும் விளைப்பந் தூறுடை வளைப்பந்தூறும் கலைத்தக்கோர் புகழ் தலைத்தக் கோலமும் திதமாமல் வினை மாத மாலிங்கமும் கலாமுதிர்க்கடுந்திறல் இலாமுரிதேசமும் தேனக்கவார்பொழில் மானக்கவார மும் தொடுகடல்க் காவல்க் கடுமுரட்கடாரமும் மாப்பொருதண்டாற்கொண்ட கொப்பர கேஸரி வந்மரான உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழதேவர்க்கி யாண்டு ௰௯ ஆவது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீராஜேந்த்ர சோழ தேவர் கங்கைகொண்ட சோழபுரத்துக்கோயிலினுள்ளால் முடிகொண்டசோழன் திருமாளிகையில் வடபக்கத்து தேவாரத்துச் சுற்றுக்கல்லூரியில் தாநஞ்செய்தருளா இருந்து உடையார் ஸ்ரீராஜராஜ ஈஸ்வர முடையார் கோயிலில் சூவாயத்தோமம நம் உடையார் ஸர்வசிவவண்ணதசைய்வ்வா வாயத்தர்க்கும் இவ்வுடையார் ஸிஷ்யரும் ப்ரஸிஷ்யரும் ஆய் ஆயத்தெஸத்து ஈயத்தெஸத்துத்தான் மௌடதேஸத்துத்தான் உள்ளாராய் யோக்யராயிருப்பார்க்கே ஆட் டாண்டு தோறும் இத்தேவர் கோயிலில் ஆடவல்லானென்னும் மரக்காலால் உள்ளூர்ப்பண் டாரத்தே நிறைச்சளவாக இரண்டாயிரக்கல நெல்லு ஆட்டாண்டு தோறும் அநாதித்த வல் பெறத்திருவாய் மொழிந்தருளத்திருமந்த்ர ஓலை செய்பியன் விழுப்பரையன் எழுத்தி னால்......த்திருவாய்க்கேழ்விப்படி கல்லில் வெட்டித்து இது இவ்வாபூக்துள்ள சைய்வ்வ ஆஆயத்தர்களே இத்தன்மம் ரக்ஷிக்க உ.

---

## ராஜேந்திரசோழன் சரித்திரம்.

ராஜேந்திரசோழன், கங்கைகொண்டசோழன் எனப்பெயருடன் பதினோராம் நூற் றூண்டின் துவக்கத்தில் சோழ ராஜபட்டம் பெற்றவன் முதலாவது ராஜேந்திரன். இவர் முதலாவது ராஜராஜன் மகன். தகப்பன் காலத்திலேயே சண்டையில் முக்கிய ஸ்தானம் வகித்து கியாதி பெற்ற இவர், ஆருத்திரா நக்ஷத்திரத்தில் பிறந்தவராகையால் அத்தினத் தில் மார்கழியில் தமது பெயரால் "ராஜேந்திர சோழன் திருநாள்" என்னும் உத்ஸவத் தைக் கொண்டாட சென்னைக்குச் சமீபத்திலுள்ள திருவொற்றியூர், திருச்சிக்குச் சமீபத் திலுள்ள உய்யக் கொண்டான் திருமலை, திருச்சி ஜில்லா காமரசவல்லி க்ஷேத்திரத்தில் அத் தினத்திலும் வைகாசி திருவாதிரையிலும் "சாக்கைக் கூத்து" விளையாடவும் ஏற்பாடு செய்வித்தனர்.

இவர் பட்டம் பெற்றதும் வடக்கே கங்கவம்சம், கிழச் சாளுக்கிய வம்சம் இந்த இர ண்டு ராஜ்யத்தின் மன்னர்கள் சண்டை செய்யத் துவங்க அவர்களை எதிர்த்து ஜயம் பெற் றனர். இப்படிச் செய்ததும் தெற்கே சென்று பாண்டியர்களை ஜயிக்கவேண்டி நேரிட்டது.

ஏற்கனவே இவரது முன்னோர்கள் பாண்டியநாடு சென்று பாண்டியர்களை ஜயித்து அந்நாட்டை தமது கைவசப் படுத்திக் கொண்டிருந்தாலும் அடிக்கடி அவர்கள் தொந்தரவு கொடுப்பதை நிவர்த்திக்க எண்ணம் கொண்ட இவர், பாண்டியர்களை நாட்டினின்றும் விரட்டி தமது மகனையே அவ்விடத்தில் 'சோழபாண்டியன்' என்னும் பெயருடன் ஸ்தாபித்தனர். இச்சமயத்தில் மதுரைமா நகரில் இவர் ஒரு அரண்மனையும் கட்டிவைத்தனராம். இவ்விஷயம் புதுச்சேரி (பிரெஞ்சுக்காரர் இலாகா) திருவாண்டார் கோயிலிலுள்ள சிலா லிகிதத்தினால் வெளியாகிறது. இவ்விதமே கேரளதேசம் சென்று அந்நாட்டையும் தன் வசப்படுத்திக்கொண்டு அதையும் தமது மகன் சோழபாண்டியன் ஆண்டுவரும்படிச் செய்தனர். இப்படியாக பாண்டிய சேர மன்னர்களை ஜயித்ததும், தமது சோழ தேசத்துடன் இவ்விரண்டு தேசங்களும் தம் வசமானதும் "மும்முடிச்சோழன்" என்னும் பட்டமும் பெற்றனர்.

பின்னர் வடஇந்தியாவில் கங்கை, வங்காளம், கோசலம் முதலிய நாடுகளுக்கு தமது படைகளை நடத்திச்சென்று அவ்விடங்களில் ஜயம் பெற்றனர். அப்பொழுதே பர்மாதேசத்திலுள்ள கடாரத்துக்கும் போய் ஜயம் பெற்றனர்.

> களிறு கங்கை நீருண்ண மண்ணையிற் காய்சினத் தொடே கலவு செம்பியன்
> குளிறு தெண்டிரைக்குரை கடாரமுங்கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும
>
> [கலிங்கத்துப்பரணி]

கடாரம் என்பது பர்மாதேசத்தில் ஆற்கான் கடற்கரையிலுள்ள ஒரு துறைமுகப் பட்டினம். இவ்விதம் கடாரம் முக்கிய நகரமாய்ப் பர்மா ராஜ்யத்திற்கு விளங்கினதுபற்றி கடாரம் என்பது சிலா சாசனங்களில் அத் தேசத்திற்கே பெயராய் விளங்கப்பட்டது.

கங்காப் பிரதேசங்களை ஜயித்ததும் தமது சோழதேசம் போய் அவ்விடத்திலும் தமது பெயரால் ஒரு ராஜதானி ஏற்படுத்த உத்தேசம் கொண்டு திரும்புகையில் கஞ்சம் ஜில்லாவிலுள்ள மஹேந்திர கிரியில் ஜயஸ்தம்பம் நாட்டினர். இப்படிச்செய்து சோழ தேசம் திரும்பினதும் கங்கை கொண்டசோழபுரம் என்று பெயரிட்டு ராஜதானியை அரண்மனை கோயிலுடன் கட்டிவைத்து அதைப் புண்ணிய பூமியாகச் செய்யக்கருதி தான் கங்காஜலம் ஏராளமாய்க் கொண்டுவந்ததை கோயிலுக்குள் 'சிங்கக் கிணறு' என்பதில் விட்டு அதை விசேஷதீர்த்தமாகச் செய்தனர். தமது தகப்பனார் ராஜராஜன் தஞ்சையில் கட்டி வைத்ததுபோல் தமது ராஜதானியாகிய இக் கங்கைகொண்ட சோழபுரத்திலும் கோயில் சிற்பமூர்த்திகளை அதைப்போலவே அமைப்பித்தனர். இது இரண்டும் எவ்விஷயங்களிலும் ஒத்திருப்பதை இப்பொழுதும் கவனிக்கலாம்.

இவை நீங்க இந்துமஹா சமுத்திரம் முதலிய இடங்களிலுள்ள தீவுகளையும் தமது கப்பற் படைகளைக்கொண்டு தமது கைவசம் செய்துகொண்டனர். தற்காலத்திலும் ஜாவா, சுமத்திரா முதலிய தீபகற்பங்களில் இந்துக்களது சில்பம் முதலிய சிலா விக்ரஹங்கள், கட்டிடங்கள் முதலியவைகள் காணப்படுவதைக்கொண்டே இவரது காலத்தில் அவ்விடங்களும் இவரது ஆளுகைக்கு உட்பட்டிருந்ததென்பது நன்கு வெளியாகலாம். நாடுகளை

ஜயிப்பதிலுமன்னியில், தமிழ்பாஷையிலும் இவருக்கு பாண்டித்தியம் அதிகமேற்பட்டதிலிருந்து இவருக்கு 'பண்டிதசோழன்' என்னும பட்டமும் ஏற்பட்டது. தஞ்சைக் கோயில் சிலாசாசனம் இதை விவரிக்கிறது.

இவருக்கு மூன்று பட்ட மஹிஷிகளிருந்தனர். அவர்களாவன:—திருபுவன மஹாதேவி, வானவன் மஹாதேவி, முக்கோக்கிழா நடிகள். இவரது புத்திரர்கள்—முதலாவது ராஜாதிராஜன் எனப்படும ஜயங்கொண்டசோழன், ராஜேந்திரசோழன் (இரண்டாவது), வீரராஜேந்திரன், என்பவர்களும ஒரு புத்திரி அம்மங்கதேவியென்பவருமாவார்கள். இவருக்கு தமது தகப்பனுருடன் பிறந்த அத்தையாகிய குந்தவைப் பிராட்டியாரிடம் அதிக விசுவாசம். இமமாது சிரோமணி பழையாறு என்னுமிடத்தில் ஒரு அரண்மனை கட்டிக்கொண்டு சிலகாலம் வாசம் செய்தபொழுது அவளுடனேயே நமது ராஜேந்திர சோழமஹாராஜர் தங்கியிருந்தனர். இப்படியாக தமது ஆட்சியில் மூன்ரும் ஆண்டில் ஒரு தினம் இந்த அரண்மனை திருமஞ்சனசாலையில் தான் இருக்கையில் பக்கத்திய ஜில்லாக்களின் கோயில்களில் அக்கிரமம் நடந்துவந்ததைக்கேட்ட இவ்வரசன் அக்கோயில்களின் வரும்படிகளைச் சீர்திருத்திச் செலவை நிர்த்தாரணம் செய்து கோயில் காரியங்கள் சரிவர நடந்துவா அவ்வவ்விடத்திய பிரமுகர்களைச் சபைகூட்டி அவர்கள் விசாரணையில் கோயில் காரியங்கள் நன்கு நடந்து வர ஏற்பாடு செய்வித்தனர். இதன் விஷயங்கள் காஞ்சி, காட்டுமன்னார்கோயில் இவ்விடங்களிலுள்ள சிலா சாசனங்களால் புலப்படுகிறது.

இவரது அத்தையாகிய குந்தவைப்பிராட்டியார் தஞ்சைமாநகரில் தர்ம வைத்திய சாலை ஏற்படுத்தினள். இதற்கு 'சுந்திர சோழ விண்ணகர் ஆதுலசாலை' எனப்பெயர். தமது தகப்பனர் போலவே இட்டமிட்டது இந்துக்கள் தமது பெற்ரோர்களை போற்றுவிக்கும் வழக்கத்தைக் காட்டுகிறது. இது நேரிட்டது 1015 கி. பி. யில். நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த ஆதுலசாலையில் இடம் போதாததுபற்றி இன்னும் கொஞ்சம் பூமியை அத்துடன் வாங்கிச்சேர்த்தனர். அதை மேப்பார்வை வகிக்கச் சவர்ணன், அறபன், மதுராந்தகன் என்பவர்களை நியமித்தார். பரம்பரையாய் அவ்வம்சத்தினர் அதை சரிவர பரிபாலிக்க ஏற்பாடு செய்தனர். இப்படியாக பரம்பரையாய் தர்மசொத்தை பாதுகாத்து வரச்சொன்னல் தர்மம் அழியாமல் விசுவாசத்துடன் ஒருவாது சந்ததியார் அதை நன்கு கவனிக்கவேண்டுமென்னும் எண்ணம் மூலபுருஷனது உத்தேசம். இது தற்காலம் மறைவுபட்டு வருவது இக்காலத்தின் கொடுமை.

இவரது காலத்தில் திருவாரூர் தியாகராஜர் சந்நதிக்கு தங்க ஓடும் மற்றைய முக்கிய சந்நதிகளுக்கு செப்பு ஓடும் அடுக்கி பரவை நங்கையார் என்பவரால் போட்டுவைக்கப்பட்டது. இவ்வோடுகளின் நிறை முதலிய விவரங்கள் கூட தற்காலத்தில் தெரிந்துகொள்ள சிலாசாசனத்தில் வெட்டிவைத்தனர். மேலும், அக்காலத்தில் நமது ராஜேந்திரசோழ மஹா ராஜாவும் இத் திருப்பணி செய்துவைத்த நங்கையாரும் நின்று ஸ்ரீதியாகராஜமூர்த்தியைப் பணிந்த இடத்தில் தீபம் எரியவும் ஏற்பாடு செய்வித்தனர். ஸ்ரீதியாகராஜமூர்த்தி கர்ப்பகிருஹத்திற்குப் பொன்னல் கூறை ஏற்பட்டதால் அதற்கு 'பொன்

ளின் திருமண்டபம்' எனப்பெயரிடப்பட்டது. இதற்கு செலவான பொன்னின் நிறை 'ராஜராஜன் காசுநிறை' என்பதால் அளவிடப்பட்டுள்ளது. மேலும், முத்து பவழம் முதலிய நவரத்தினங்களால் கோர்க்கப்பட்ட மாலைகளும் அந்த சந்நதியில் தொங்கவிடப்பட்டன.

கும்பகோணம் சமீபத்திலுள்ள திருநாகேசுவரம் கோயிலுக்கு இவரது தகப்பன் ராஜராஜன் காலத்தில் ராணுவத் தலைவராயிருந்து, தஞ்சை கோயில் பிராகாரத்தைக் கட்டி வைத்த கிருஷ்ணன் ராமன் என்பவர் ஏராளமான தானம் செய்தது மன்னியில் அதை "ராஜேந்திரசோழன் காசு" என்னும் நாணயத்தால் குறிப்பிட்டிருப்பதிலிருந்து இவரது காலத்தில் தனி நாணயம் வெட்டிவைத்தது புலப்படுகிறது. தென் ஆற்காடு ஜில்லா எண்ணாயிரம் என்னுமிடத்தில் வேத சாஸ்திரம் படிக்க கலாசாலை ஏற்பாடு செய்து அதில் படிப்பவர்களுக்கு போஜனசாலையும் ஏற்படுத்தி விசேஷகௌரவம் பெற்றவர் நமது ராஜேந்திர சோழ மன்னர் இவ்வூருக்கு ராஜராஜசதுர்வேதிமங்கலம் எனவும் பெயரிடப்பட்டதிலிருந்து இவரது தகப்பன் ராஜராஜன் காலத்தில் இது ஏற்பட்டிருக்கவேண்டும். அல்லது இவர் தமது தகப்பன் பெயரால் அதை ஏற்படுத்தியிருக்கவேண்டும்.

அக்காலங்களில் கோயில்கள் வித்தியாஸ்தானமாகி விளங்கினது கவனிக்கத்தக்கது. திருவாய்மொழி கற்பிக்க நான்கு பெயர் ஏற்படுத்தப்பட்டிருந்தனர். இவர்களுக்கு தினப்படி முக்குறுணி நெல்லு கொடுபட திட்டம் செய்யப்பட்டது. இவ்விடம் 'கங்கை கொண்ட சோழன்' மண்டபத்தில் ரிக்வேதம், யஜுர்வேதம் படிக்க 75 பிள்ளைகளும், சந்தோகசாமவேதம் படிக்க 20 பேர்களும், தளவகார சாமவேதம் படிக்க 20 பேர்களும், வாஜசநேயம் படிக்க 20 பேர்களும், அதர்வண வேதம் படிக்க 10 பேர்களும் பௌதாயநீய கிருஹ்யகல்பம், கணம் இவைகள் படிக்க 10 பேர்களும் ஆக 230 பிரமசாரிப்பிள்ளைகளும், ரூபாவதாரம் படிக்க 40 பேர்களுமாக 270 பேர்களும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தினப்படி 6நாழி நெல் கொடுக்கவும் விதிக்கப்பட்டது. இவ்விதம் 270 முக்கிய பிள்ளைகள் தவிர இதாள் வியாகாணம் கேட்பார் 25 பேரும், பிரபாகாம் கேட்பார் 25 பேர்களும், வேதாந்தம் கேட்பார்கள் 20 பேர்களும் ஆக 70 பேர்களும் இவர்கள் ஒவ்வொருவருக்கும் தினப்படி ஒரு குறுணி இரண்டு நாழி நெல்லும் கொடுக்கும்படி நிர்மாணிக்கப்பட்டது. வியாகாணம் கற்பித்த நம்பிக்கு ஒரு கலமும், பிரபாகாம் கற்பித்தவருக்கு ஒரு கலமும், வேதாந்தம் சொல்லிவைத்தவருக்கு ஒரு கலமும் ஒரு தூணியும் நிர்மாணம் செய்யப்பட்டது. ரிக்வேதம் கற்பிக்க மூன்று வித்வானும், யஜுசுக்கு மூன்று பேர்களும், சந்தோகத்திற்கு ஒருவரும், தளவகாரசாமத்திற்கு ஒருவரும், வாஜசநேயத்திற்கு ஒருவரும் பௌதாயனிய கிருஹ்யகல்பம், காடகம் இவைகள் கற்பிப்பார் 1, ஆக 10 வித்வான்களும் நியமிக்கப்பட்டனர். ரூபாவதாரம் கற்பித்தவருக்கு தினப்படி மூன்று குறுணி நெல்வீதம் கொடுக்கப்பட்டது. ஆக தினப்படி இவர்களுக்கு 30 கலம் வீதம் நெல் 'ராஜராஜன் மரக்காலால்' வருஷாவருஷம் 10506 கலம் நெல் செலவிடப்பட்டது. இப்படி நெல் தானியம் தவிர $61\frac{1}{2}$ கழஞ்சு பொன்னும் பட்டுவாடா செய்யப்பட்டது. இவை நீங்கலாக இதா பிராமணர் வேதம் படித்தவர்கள் 506 பேர்வழிகள் இவ்விடம்

போஜனம் செய்யவும் கிருஷ்ணஜயந்தி தினத்தில் மூன்று வேதம் படித்த வல்லபருக்கு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கபுஷ்பம், தங்கமோதிரம் அளிக்க ஏற்பாடும் செய்யப்பட்டது. இவரது காலத்தில் வேதவித்தைக்கு எவ்வளவு மஹிமை வைத்திருந்தனரென்பது நன்கு விளங்குகிறது.

திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயில் கர்ப்பக்கிருஹம் இவரது காலத்தில் புதுப்பிக்கப்பட்டது. கருங்கற்களால் இவைகளை முன்னிருந்த மாதிரி இவரது காலத்தில் புதிதாய்க் கட்டிவைத்தது விசேஷமானது. மூன்று அந்தஸ்துடன் கூடிய இவ்விடத்திய கர்ப்பக்கிருஹம் கொஞ்சமேனும் குற்றமற்ற கருப்புக் கற்களால் ரவி எனப்படும் வீர சோழ தக்ஷன் என்னும் சில்பியால் சரணம், கூடம், கோஷ்டம், நீவம் இவைகளுடனும் சிம்ம முகம், நாசிகம் இவைகளுடனும் கட்டிவைக்கப்பட்டதாம். மேலும் இவ்விடம் கோயிலில் கணக்குகளில் நேரிட்டிருந்த கெடுதல்களை அரசனின் உத்தியோகஸ்தனான ராஜேந்திர சிங்க மூவேந்த வேளான் என்பவர் ‘வக்காணிக்கும்’ மண்டபத்தில் கச்சேரி செய்து விசாரணை செய்து அவைகளைச் சீர்திருத்தினான். இவரது காலத்தில் வடக்கிலிருந்து, ஆரியதேசம், விராடதேசம் இவ்விடங்களிலிருந்து வந்த ஜனங்கள் இவ்வூரில் சாசுவதமாய்த் தங்கி பூமி முதலிய வாங்கினதும், அப்படிப்பட்ட பூமிகளுக்கு வரி முதலியவைகளை ராஜா நீக்கிவிட்டதும் அறியக்கூடியது. இவ்விடம் கோயிலிலுள்ள “வியாகரண தான வியாக்கியான மண்டப” த்தில் ஸம்ஸ்கிருத இலக்கணம் படித்த பிள்ளைகளுக்கும் அதைக்கற்பித்த உபாத்தியாயர்களுக்கும் தங்குவதற்கு இடம் ஏற்படுத்தப்பட்டதாம். இம் மண்டபத்திலேயே பாணினி மஹரிஷிக்கு 14 தினம் இலக்கணத்தின் சூத்திரங்களை கற்பிக்க பகவான் (வியாகரண தானப் பெருமாள்) தோன்றினதாகத் தெரிவிக்கப்பட்டுளது.

---

## திருவிசைப்பா பாடல்கள்.

கருவூர்த்தேவர் பாடியது:—

பண்—பஞ்சமம்.

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட அங்கனே பெரிய நீ சிறிய
என்னையாள்விரும்பி யென்மனம்புகுந்த எளிமையை என்றுநான் மறக்கேன்
முன்னமால் அறியா ஒருவனும் இருவா! முக்கணா! நாற்பெருந் தடந்தோட்
கன்னலே! தேனே! அமுதமே! கங்கைகொண்டசோ ளேச்சரத் தானே! 1

உண்ணெகிழ்ந்துடல நெக்கு முக்கண்ணாவோலமென் றோல மிட்டொரு நான்
மண்ணினின் றலறேன்வழிமொழி மாலைமழலையஞ் சிலம்படி முடிமேற்
பண்ணி நின் றுருகேன் பணிசெயே னெனினும் பாவியேனாவியுள் புகுந்தென்
கண்ணினின்ற கலானென்கொலோ கங்கைகொண்ட சோளேச்சரத் தானே. 2

அற்புதத்தெய்வ மிதனின்மற்றுண்டே யன்பொடுதன்னையஞ் செழுத்தின்
சொற்பதத்துள் வைத்துள்ள மள்ளூறுந் தொண்டருக் கெண்டிசைக் கனகம்

பற்பதக்குவையும் பைம்பொன் மாளிகையும் பவளவாயவர் பணைமுலையுங்
கற்பகப்பொழிலு முழுதுமாங் கங்கைகொண்ட சோளேச்சரத் தானே. 3

ஐயபொட்டிட்ட வழகுவாணு தலுமழகிய விழியும் வெண்ணீறுஞ்
சைவம் விட்டிட்ட சடைகளுஞ்சடைமேற்றாங்கமுஞ்சதங்கையுஞ்சிலம்பு
மொய்கொளெண்டிக்குங்கண்டநின்றொண்டர்முகமலர்ந்திருகணீரும்பக்
கைகண்மொட்டிக்கு மென்கொலோ கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 4

சுருதிலானவனுந்திருநெடுமாலாஞ்சுந்தரவிசும்பினிந்திரனும்
பருதிவானவனும் படர் சடை முக்கட்பகவனுமகவுயிர்க்கமுதா
மெருதுவாகனனுமெயில்கண்மூன்றெரித்தவேறு சேவகனுமாம்பின்னுங்
கருதுவார் கருது முருவமாங் கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 5

அண்டமோரணுவாம் பெருமைகொண்டணுவோரண்டமாஞ்சிறுமைகொண்டடியே
னுண்டவூணுனக்காம் வகையெனதுள்ள முள்கலந்தெழுபரஞ்சோதி
கொண்டாண்பாம்பாம்பெருவரைவில்லிற்குறுகலர்புரங்கண்மூன்றெரித்த
கண்டனே நீலகண்டனே கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 6

மோதலைப்பட்டகடல் வயிறுதித்தமுழுமணித்திரள முதாங்கே
தாய்தலைப்பட்டங்குருகியொன்றாய தன்மையிலென்னை முன்னின்ற
நீ தலைப்பட்டாலியானுமவ்வகையே நிசிசரரிருவரோடொருவர்
காதலிற்பட்ட கருணையாய் கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 7

தத்தையங்கனையார் தங்கண்மேல் வைத்தயாவை நூறாயிரங்கூறிட்
டத்திலங்கொரு கூறுன் கண்வைத்தவருக்கமருலகளிக்கு நின்பெருமை
பித்தனென்றொருகாற் பேசுவரேனும் பிழைத்தவை பொறுத்தருள்செய்யுங்
கைத்தலமடியேன் சென்னிவைத்த கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 8

பண்ணிய தழல்காய் பாலளாநீர்போற்பாவமுன்பறைந்து பாலனைய
புண்ணியம் பின்சென்றறிவினுக்கரியப்புகுந்ததோர் யோகினிற்பொலிந்து
நுண்ணியையெனினுநம்பநின்பெருமைநுன்னிடையொடுங்க நீவந்தென்
கண்ணினுண்மணியிற்கலந்தனை கங்கைகொண்ட சோளேச்சரத்தானே. 9

அங்கைகொண்டமரர் மலர் மழை பொழிய வடிச்சிலம்பலம்வந்தொருநா
ளுங்கைகொண்டடியேன் சென்னிவைத்தென்னையுய்யக்கொண்டருளினைமருங்கிற்
கொங்கைகொண்டனுங்குங்கொடியிடைகாணிற்கொடியளென்றவிர்சடைமுடிமேற்
கங்கைகொண்டிருந்த கடவுளே கங்கைகொண்டசோளேச்சரத்தானே. 10

மங்கையோடிருந்தேயோகு செய்வானை வளரிளந்திங்களைமுடிமேற்
கங்கையோடணியுங்கடவுளைக் கங்கைகொண்டசோளேச்சரத்தானை
யங்கையோடேந்திப்பரிதிரிகருவூரறைந்த சொன்மாலையாலாழிச்
செங்கையோடுலகிலரசு வீற்றிருந்து திளைப்பதுஞ்சிவனருட்கடலே. 11

## குருகைக்காவலப்பன் கோயில்.

இவ்வூர், கங்கைகொண்டசோழபுரத்திற்கு வட மேற்கில் சுமார் ஒரு மைல் தூரத்தி லுள்ளது. இவ்வூர் ஒரு விசேஷ விஷ்ணு க்ஷேத்திரம். இது ஆழ்வார்களால் பாடப்படாத தானாலும் புராண ஸ்தலங்களுள் ஒன்று. வீர நாராயணப் பெருமாள் சந்நிதி முன்னுள்ள துவாரபாலக பிம்பங்கள் வெகு அருமையான சிற்ப லக்ஷணங்களுடன் பொருந்தியுள்ளது. இவ்விடம் கோயிலிலுள்ள ஸ்ரீராமர் சந்நிதி வெகு விசேஷமானது.

### ஸ்ரீராமர் சந்நிதி.

ஸ்ரீராமர், ஸீதை, லக்ஷ்மணர், ஹனுமார் விக்ரஹங்கள் சிலையாலல்லாமல் தாரு (மரத் தால்) செய்யப்பட்டனவுமன்னியில் வெகு அழகாய் விளங்கிவருகின்றன. இங்குள்ள ஹனுமார் மற்றைய இடங்களிலுள்ளதுபோல் அஞ்சலி பந்தத்திலில்லாமல் ஒருவரைக் குறிப்பிடுக் காட்டும் பாவனையில் ஒரு கையைக் கீழாகவும் மற்றொன்றை அதற்கு மேலா கவும் சுட்டிக்காட்டும் பாவனையில் அமைக்கப்பெற்றிருக்கிற விசேஷத்தை உடையதா யுளது. இதற்கு ஸ்தல புராணத்தில் ஆதாரமுண்டு.

இவ்விடம் பார்கவ புஷ்கரணியில் ஒரு தாமரைப் புஷ்பத்தில் வாசம் செய்து கொண்டிருந்த மரகதவல்லித்தாயார் ஸ்ரீராமபிரான் முன்னிலையில் வீர நாராயணப் பெருமா ளுக்கு விவாஹம் செய்துவைக்கப்பட்டனளாம. ஹனுமாரை மரகதவல்லியிருப்பதைப் பார்த்துவரச்சொன்ன ஸ்ரீராமரிடம அவர் வந்து அத்தாயாரின் அளவு முதலிய விவரங் களைத் தெரிவித்தமாதிரியாக ஹனுமாரின் கைகளின் குறிப்பு ஏற்பட்டுள்ளதாம். இம மரகதவல்லி கங்கைகொண்டசோழபுரத்தை ஒரு ஸமயம் அரசு செலுத்திய ஜிமஹண சக்ர வர்த்தியால், ஜனக மஹாராஜனுல் ஸீதாதேவி புத்திரியாக ஸ்வீகரிக்கப்பட்டதுபோல், அங்கீகாரம் செய்யப்பட்டவளாம்.

### ஆளவந்தார் சரித்திரமும் இவ்வூர் பெயர் ஏற்பட்டதின் காரணமும்.

இக்கோயிலில் ஆளவந்தார் ஸந்நிதி விசேஷமுள்ளது. இவருடைய பாட்டனான நாதமுனி சுவாமிகள் தன்னுடைய பல சிஷ்யர்களுக்குள் ஒருவரான குருகாவலப்பன் என் பவரை தனக்குப் பிறக்கப்போகும் பௌத்திரனை ஆளவந்தாரெனப்படும் யாமுனாசாரியா ருக்கு ஸம்பிரதாய உபதேசம் செய்யும்படி நியமித்துப் போனுரென்றும், அவர் இந்த சந்நிதியிலேயே யோகத்திலிருந்து கொண்டிருந்து கங்கைகொண்டசோழபுரத்திலுள்ள சோழமன்னர் ஆண்மனையில் ராஜ்பசுகம் அனுபவித்துக் கொண்டிருந்த ஆளவந்தார் பிரௌடரான பின்னர் சில தந்திரங்களினுல் அவரை மயக்கி தமது குருவின்கட்டளைப்படி உபதேசம் செய்து பரமவைஷ்ணவ பாகவதராகச் செய்தனராம். இக் குருகாவலப்பன் பெயரைக் கொண்டே இவ்வூருக்கும் பெயர் ஏற்பட்டது ஒரு விசேஷம்.



# அன்பில்.

அன்பில் என்பது பிரேமபுரி என்னும் வடமொழியின் திரிபு. பிரேமை என்றால் அன்பு; புரி என்றால் ஊர். அன்பு குடிகொண்டிருக்கும் ஊர் என்பது இதன் பொருள். இது நூற்றெட்டுத் திருப்பதிகளிலொன்று. இவ்வண்ணமே இதனருகேயுள்ள அன்பிலாலந்துறை யென்பதும் ஆயிரத்தெட்டு சிவஸ்தலங்களிலொன்றாகும். இவ்விரண்டனுள் சற்று மேற்கேயுள்ள விஷ்ணுஸ்தலத்திற்கு மேலன்பிலென்றும், அதற்குக் கால்நாழிகை வழி கிழக்கேயுள்ள சிவஸ்தலத்திற்குக் கீழன்பிலென்றும் பெயர். இவையிரண்டும் கோயிலென்றே வழங்கப்படுகின்ற மஹாக்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்துக்

குப் பதினான்கு மைல் கிழக்கே வடதிருக்காவேரியாற்றின் வடகரையில் இராஜமார்க்கத்திலிருக்கின்றன. தற்சமயம் திருச்சியிலிருந்து விழுப்புரம் போக ஏற்படும் ரயில் மார்க்கத்தில் லாலுகுடிக்கு 4 மைல் தூரத்தில்தானிருப்பதால் அடியார்கள் அங்கு எளிதிற்சென்று கண்டுகளித்து வந்தனை வழிபாடுகளை நியமத்துடன் அழகுபெறச்செய்து இன்புற்றுப் பரகதிக்கு வேண்டும் சாதனங்களையெல்லாம் குறைவறப்பெற்றுவரலாம்.

இவ்விரண்டு ஸ்தலங்களும் பாண்டவர் காலத்திற்கும் முன்னமேயே உண்டான பாடல் பெற்ற ஸ்தலங்களேயன்றி ஸாதாரணமான ஊர்களல்லனவாம். இககாலரீதியின்படி பார்ப்பின், கிறிஸ்து பிறப்பதற்கு 4202 வருஷங்களுக்குமுன்னே அவதரித்தவரும் ஆழ்வார்கள் பதின்மருள் பழமையும், நான்காவதானவருமான (மழிசைவந்தசோதி) என்னும் திருமழிசைப்பிரானால் பாடல் பெற்றதுமாதல்பற்றி, திருவன்பிலென்னும் திருப்பதி 6105 வருஷங்களுக்கு முன்பே உண்டாயிருக்கவேண்டுமென்று சொல்லவேண்டும். இவ்வண்ணமே கீழன்பிலென்னும் சிவஸ்தலமும், விஷ்ணுஸ்தலமாகிய மேலன்பிலினும் சற்று முற்பட்டதாக இருக்கவேண்டுமேயல்லாது, அதனை அதற்குப்பின்னிட்டதென்று சொல்லவொண்ணாது.

இவ்வாறாக இவ்விரண்டு க்ஷேத்திரங்களும் பண்டைக்காலந்தொட்டு பிரஸித்திபெற்றவளநகர்களெனலாம். இந்தச் சோழமண்டலத்தில் ஆதிகாலந்தொட்டே இவ்விரண்டு நகரங்களிலும் அப்போழ்தைக்கப்போழ்து அரசாண்ட சோழன் முதலான மன்னர்களால் அவ்வாலயங்களின் கல்வரிகளிலும், ஸ்தம்பங்களிலும், மதில்களிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கின்ற சிலாசாசனங்களாலும் இவை பூர்வீகமானவையே யென்னலாம். அன்பிலாலந்துறையைப் பற்றித் திருஞானசம்பந்தமூர்த்தி பதிகம் பாடியிருக்கின்றார்: —ஒருகாலவிசேஷத்தில் ஆற்று வெள்ளப் பெருக்கால் நதியைக்கடந்து செல்லமாட்டாமல் இவர் சடையார்கோவிலிலிருந்தபடியே பதிகம் பாடியதை அதன் எதிரே காவிரியாற்றின் இக்கரையிலிருந்த வினாயகக் கடவுள் உற்றுக்கேட்டதனால் அவருக்குச் செவிசாய்த்த வினாயகரென்னும் பெயர் இன்றைக்கும் வழங்கிவருவதைக் காணலாம். இவ்வினாயகர் இன்றைக்கும் தென்பக்கமாய்ச் செவியைச் சாய்த்துக் கொண்டு அப்பதிகத்தை ஆவலோடு உற்றுக்கேட்டுக் கொண்டிருப்பதையும் பார்க்கலாம். இங்குள்ளார் அன்பிலாலந்துறையை தக்ஷிணகயையெனக்கொண்டே, கயைக்குப் போகிறவர்கள் அங்கு சிராத்தஞ்செய்யும் வண்ணமே இங்கேயும் சிராத்தஞ்செய்துவருகிறதை யாருங்காணலாம்.

இந்த க்ஷேத்திரங்களின் தெற்கே காவேரியென்னும் பொன்னிமாநதியும், அருகே ஸாவித்திரிநதியும், சற்று வடக்கே (பல்குனி) பங்குனிநதியும் ஆகிய இம்மூன்று நதிகளுமிருக்கின்றன. இவற்றுள் பிற்கூறிய இரண்டு புண்ணியநதிகளும் இந்த ஸ்தலங்களின் அருகே காவிரியாற்றில் வந்து ஸங்கமமாகின்றதனால், இந்த இரண்டு க்ஷேத்திரங்களையும் ஒன்றாகப்பாவித்து பிரேமபுரியை திருமுக்கூடல் (திருவேணி) என்று பொதுப்படச்சொல்லுகிறார்கள்.

சின்னாட்களுக்குமுன்னே தஞ்சைமாநகரிலிருந்த சரபோஜிமகாராஜாவானவர், தாம் காசியாத்திரை செய்துவிட்டுத் திரும்பிவருகையில் இவ்விடத்திலும் தமது பிதிருக்களை

யுத்தேசித்து சிராத்தஞ்செய்ததுமுண்டு. முற்காலத்திலுள்ளோர், இக்காலத்தவரைப் போல வீணே சைவம் வைஷ்ணவமென்ற பேதம் பாராட்டி எப்போதும் எலியும்பூனையுமாய்ச் சண்டையிடுவதுபோல இருந்திராரென்பதற்கு இங்குள்ள மண்டுகபுஷ்கரணியானது இவ்விரண்டு ஆலயங்களுக்கும் பொதுவாயிருப்பதே சிறந்த சான்றாகும். இவ்வாறே அன்பில் (பிரேமபுரி) என்னும் பேர் இவ்விரண்டிற்குமே பொதுவாக இடப்பட்டிருக்கின்றதையும் காண்கலாம்.

சில நாட்களுக்குமுன்னே கீழன்பில் சிவாலயத்திலிருந்த சிலாசாசனங்கள் பலவற்றுள் எடுக்கக்கூடிய சிலவற்றை மட்டும் எடுத்துப் பார்த்ததில், இது நெடுங்காலமாகவுள்ளதென்றே நிச்சயமாகக் காணலாம். கிறிஸ்து பிறந்த 1070–வது வருஷத்தில் அரசாண்ட இராஜகேசரிபான், குலோத்துங்கசோழதேவன் மேலன்பில் சுந்தராஜபபெருமாளுக்குக் காணி பூமிகளை விட்டதாக அங்குள்ள சிலாசாசனங்களுள் ஒன்றினால் அறியலாம். 1063–75 இந்த வருஷங்களுக்கு இடையே அரசாண்ட வீராஜேந்திரனென்பவனும் சுந்தராஜப் பெருமாள் ஆலயத்திருப்பணிசெய்ததாகவுந் தெரியவருகின்றது. 1224–வது வருஷத்தில் துங்கபத்திரைநதிதீரத்திலுள்ள விஜயநகரத்தில் அரசாண்டு மிகுந்த கீர்த்திபெற்ற கிருஷ்ணராஜதேவராயர், அன்பில் சுந்தராஜப் பெருமாளுக்கு பூமிதானஞ்செய்தாரென்று அங்குள்ளவோர் சிலாசாசனத்தால் தெரியவருகிறது. கீழன்பில் பிரேமபுரீசுவரருக்கு 1268–வது வருஷத்தில் அரசாண்ட பாண்டியராஜாவாகிய குலசேகரன் என்பவன் பூமிதானஞ் செய்திருக்கிறான். இவ்விரண்டு ஸ்தலங்களும பாடல் பெற்றனவாதல்பற்றி, இவை இந்தச் சிலாசாஸனங்களேற்பட்ட காலத்துக்கு முன்பே கட்டப்பட்டிருக்க வேண்டுமென்பதும் நிச்சயமேயாம்.

மேலும் இத்தலத்தில் ஸாமவேதிவிநாயகர் ஸத்யவாசகவிநாயகர் எனப்பெயர் பெற்ற விநாயகர் கோவில்கள் இருக்கின்றன தீர்த்தத்திற்கு பிரேமபுஷ்கரணி அல்லது மண்டுகபுஷ்கரணி என்றும அதின் கரையிலுள்ள ஈசனுக்கு பிரேம புரீசுவரர் என்றும், அம்பாளுக்கு பிரேமவல்லி யென்றும் விமானத்துக்கு புண்ணியாங்குர விமானமென்றும் பெயர்கள் வழங்குகின்றன. வடவிருக்ஷநிழலில் இருப்பதால் வடமூலநாதரென சுவாமிக்கு மற்றொரு நாமமுமுண்டு.

இங்குள்ள சிவலிங்கம், ருத்திராக்ஷத் திருமேனி; கண்ணிற்குப் புலப்படாத துவாரங்கள் இதில் எண்ணிறந்தன. நுண்ணிய ஈர்க்குகளை நுழைத்தால் எளிதில் உள்ளே சென்று மறையும். காசியிலிருப்பது போலவே, விச்வேசர், பிந்துமாதவர், டுண்டிவிநாயகர், தண்டபாணி, பைரவர், ஆகிய எல்லாருமிருக்கிறார்கள். கயையிலிருப்பது போலவே இங்குள்ள வடவிருக்ஷத்திலும் விழுது விடாதிருப்பது ஆச்சரியம்.

ஒரு ஸமயம் ஐந்து முகங்களுடன் கூடிய பிரும்மா தனது வாஹனத்திலேறிக் கொண்டு, பார்வதிதேவி தோழிகளுடன் மலர் கொய்து விளையாடும் சோலையினருகில் செல்ல, வாகனமேறி ஈசன் ஒருவரைத் தவிர்த்து ஏனையோர் இவ்விடம் வாரார் எனக்கருதிய தோழிமார்கள், பவானியை நோக்கி "ஓ தேவி! பஞ்சமுகத்தினாகிய உனது நாதர்

உன்னைப் பார்க்க விரும்பி இதோ வருகிறார் பார், என்று கூறவே சம்புப்பிரியையும் எழுந்து நாணமெய்தி நோக்க, வருகிறவர் ப்ரும்மா என அறிந்து கோபம் கொண்டு 'நீ யாது காரணத்தால் ஐந்து முகங்களுடன் வாகனத்திலுமேறி சிவஸாம்யத்தை அடைந்து எனக்கு ப்ரமத்தை விளைத்தனையோ, அக்காரணத்தாலே உனது தலைகளிலொன்றை இழக்கக்கடவாய்' எனவும் பஞ்சமுகப்பிரம்மா, அதுமுதல் சதுர்முகப்பிரம்மாவாக மாறினார். தேவிக்குச் செய்த அபராதத்தை உத்தேசித்து அத்தலத்திலேயே தவமியற்றி உமாஸஹாயரின் கிருபை கிடைக்கப் பெற்று, டுண்டிவிநாயகர் என்னும் நாமரூபம் பெற்று, கோயில் கொண்டு விளங்குவதையும இத்தலத்தில் காணலாம். மற்றுமித்தலத்தை சூரியன் அடைந்து மகாதேவனை பூஜித்து தன் பேரால் சூரியபுஷ்கரணியை உண்டாக்கினான். இது மிகவும் புண்ணியதீர்த்தம். மற்றும சந்திரன், வாசுகி, வால்மீகிமுனிவர், வசிஷ்டர், காசியபர், பரதமுனிவர், வியாஸர், அளர்க்கராசன், காவேரியம்மன், சுக்கிரீவன், ஸ்ரீராமன் முதலியோர்கள், பிரேமபுரீசனைப் பூஜித்து பேறுபெற்ற பல திருவிளையாடல்கள் இத்தல மாகாத்மியத்தில் காணலாம்.

முன்னொரு காலத்தில் இந்தப் பிரேமபுரியில் மிகவும் தர்மிஷ்டனாயும் சிவபக்தனாயும் பிரேமன் என்னும் பேருடைய ஓர் இடையன் இருந்தான். அவன் வெகு சிரத்தையுடன் கோவில் பசுக்களுக்கு புல்லையும், அன்னத்தையும் அளித்து பாதுகாத்து வந்ததுமன்றியில், அப்பசுக்கள் தரும் பாலையெல்லாம் குடங்களில் நிறைத்து பிரேமலிங்கத்தின் அபிஷேகத்திற்கு பக்தியுடன் கொடுத்துவந்தான். தவிரவும் வயதானமாடுகளையும், மலட்டுமாடுகளையும், காளைமாடுகளையும், விற்றுக் கிடைத்தபணத்தையும் ஒரு காசேனும் தான் இச்சிக்காமல் கோவிலுக்குச் சேர்த்து விடுவன். சிவஸொத்து என்ற பயத்தினால் கொஞ்சமேனும் தான் திருடுகிறதில்லை இவனது புத்திரர்களும் பௌத்திரர்களும் இவனைப் போலவே பயபக்தியுடன் இருந்தார்கள். இவ்வாறு நிகழும ஒரு ஸமயத்தில் எல்லாப் பசுக்களுக்கும் அதிகாரியாயும், கணக்கனாயும், தனத்தில் பேராசையுள்ளவனாயுமாயிருந்த வசி என்பவன் இந்தப் பிரேமனை தனியே தருவித்து "நீ எவ்வுபாயத்தினாலாவது எனக்கு பணம் கொடாத வரையில் நான் உன்பேரில் மேலதிகாரிகளுக்கு கோளுரை சொல்லி உனக்குப் பெரிய அனர்த்தத்தை விளைவிப்பேன்" என்றான். ஆனால் பிரேமன் ஈச்வரனுக்கு பயந்து அதற்கு உடன்படவில்லை. வசியும அவனைப் பலவிதமாய் அதட்டியும் பயமுறுத்தியும் பார்த்தான். பிரேமனுக்கு இருந்த அளவிலடங்காத சிவபக்தியானது, சிவஸொத்திலிருந்து லஞ்சம் கொடுத்து சிவனுக்கு துரோகம் செய்வதற்கு அவன் மனதில் கொஞ்சமேனும் இடம் கொடுக்காமல் தடுத்துவிட்டது. இதனால் கணக்கனாகிய வசிக்கு மிகவும் கோபம் உண்டாய் அவன் மேலதிகாரியினிடத்தில் இப்பிரேமன் கோவில் எருது, பால் தயிர் இவைகளை விற்று வெகு திரவியங்களைத்திருடி அதனால் தனவானாயிருப்பதால் இவனை தண்டிக்கவேண்டும் என்னும் பொய் வார்த்தைகளைச் சொல்லி அவ்வதிகாரிக்கு பிரேமன் பேரில் மிகவும் கெட்ட அபிப்பிராயம் ஏற்படும்படி செய்து பிரேமனுக்கு கடுமையான தண்டனையை விதிப்பித்தான். உடனே வசியும் பிரேமனுக்குக் கால்களில் விலங்கிட்டு சிறைச்சாலையில் அடைத்துப் பலவாறாக ஹிம்ஸித்தான். இவ்வாறு சிறைச் சாலையில் இடையன் பிரேமன் பாதிராத்திரியில் தனியே வருந்தி பிரேமபுரீசுவரரை நினைத்து

நினைத்து "நிரபராதியாயிருக்கும் படியான என்னை இந்தவசியென்பவன் மிகவும் ஹிம்ஸிக்கிறானே; ஏ, தீனபந்தோ! ஸர்வஸாக்ஷியாயிருக்கும் படியான உனக்குக்கூடவா நான் நிரபராதி என்று தெரியவில்லை. உன்னைத்தவிர வேறு தெய்வத்தை நான் கண்டிலேனே! என்னை உபத்திரவப்படுத்தும் இந்த பாபியை நீ கேட்கலாகாதா? பக்தவத்ஸலன் என்னும் பெயர் உனக்குத்தகாததா? காலை முதல் இவனுடைய ஹிம்ஸைகளால் சரீரமும் மனதும் நொந்து போய் பசியால் வருந்துகிறேனே. கடைக் கண்ணால் சற்றுப் பார்க்கலாகாதா. ஹா வடமூலநாதா" என்று மனங்கலங்கி துதித்துக்கண்ணீர் ததும்பப்புலம்பி மூர்ச்சை போய் தரையில் வீழ்ந்தனன். உடனே பிரேமபுரீசுவரராகிய அந்த வடமூலநாதரும் தமது பக்தன் பேரில் மனமிரங்கி இனி தாமதிப்பது சரியல்ல என்று அறிந்து அந்த அர்த்தராத்திரியில் ஓர் ஸ்வர்ணகிண்ணத்தில் பால் அன்னத்தை தாமே எடுத்துக் கொண்டு அச்சிறைச் சாலையின் கதவின் அருகில் வந்து 'பிரேமா, பிரேமா' என்றழைத்தார். அது கேட்டு திடீரென்று மூர்ச்சை தெளிந்தெழுந்த பிரேமனும் வந்திருப்பவன் கணக்கன் வசி என்று பயந்து "ஓ கணக்கனே! நீ அர்த்தராத்திரியிலும் கூட என்னை வருத்த அழைக்கின்றாயே. சற்றேனும் குற்றமற்ற என்னை இப்படி ஹிம்ஸிக்கலாமா? உனக்கு இது ஈச்வரசம்மதமாகுமா" என்றான். உடனே தயாநிதியாகிய பரமேச்வரனும் "ஓ பிரேமனே, நான் கணக்கனாகிய வசியல்லேன், நீ சதா சர்வகாலமும் சிந்தனை செய்யும் பிரேமலிங்கமே நான். நீ பசியால் வருந்தாமல் இருக்கும் பொருட்டு அன்னம் கொண்டுவந்திருக்கிறேன். கதவைத் திறப்பாய்" என்றார். இதைக்கேட்டதும் பிரேமனுக்கு சந்தோஷமுண்டாயிற்றென்றாலும் பூர்ணநம்பிக்கைவாராததால் கதவிடுக்கினால் பார்த்தும் சந்தேகம் தீராமையால் வந்திருப்பவர் பிரேமபுரீசிவரரேயானால் தனது காலில் போட்டிருக்கும் விலங்கு முறிபட்டுப்போகட்டும் என்றுரைக்க அவ்வாறு அந்த விலங்குகள் முறிவுபட உடனே மிகுந்த சந்தோஷத்துடன் கதவைத்திறந்து சிவபெருமானைத் தரிசித்து அஞ்சலிபந்தம் செய்து வணங்கி ஆனந்தப் பெருக்கால் மெய்மறந்து நிற்கும் ஸமயத்தில் ஈச்வரன் அவனை தான் கொண்டுவந்த அன்னத்தை சாப்பிடச் சொல்ல அவனும் அவ்வாறே சாப்பிட்டான். பிறகு ஈச்வரன் பிரேமனை அவன் வீட்டிற்குப் போகச் சொல்ல அதற்கு அவ்விடையன் "ஓ, ஈச்வரா, காலையில் அந்த குரூர புத்தியுள்ள வசியானவன் என்னைப் பிடித்து இழுத்து அடிப்பானே, என்ன செய்வேன்" என்று கதற அதற்கு ஈச்வரன் "கொஞ்சமேனும் பயப்படாதே, காலையில் அந்த வசி உன்னிடம் வந்தால் நீ ஒன்றையும் திருடவில்லை என்பதற்கு பிரேமலிங்கமே சாக்ஷி, அவரைக் கேட்டால் உண்மை வெளியாகும் என்று சொல்லு. நானும் உனக்கு நிச்சயம் சாக்ஷி சொல்லுகிறேன்" என்று கூறி அவன் மனதைத் தேற்றி அந்தர்த்தானமாயினர். பொழுது விடிந்ததும் பிரேமன் காராகிருஹத்தை விட்டு தப்பித்து விடு போய்விட்டான என்ற சமாசாரம் கேட்டதும் வசி மிகவும் கோபம் கொண்டவனாய் சவுக்கை கையிலேந்திக் கொண்டு பிரேமனை நோக்கிக் வரும் போது பிரேமன் அங்கிருந்த எல்லோருடைய முன்னிலையிலும் தான் சற்றேனும் குற்றமற்றவன் என்றும் அதற்கு பிரேமமஹாலிங்கமே சாக்ஷியென்றும் தன்னை வசி அன்னியாயமாய் பிடிக்கிறானென்றும் உரைத்தான். இதைக் கேட்ட வசி நீ பிரேமலிங்கத்தைக் கொண்டு சாக்ஷி சொல்லுவிப்பாயானால் உன்னை தண்டிக்கவில்லை என்று பரிஹஸித்தான். உடனே எல்லோரும் பிரேமபுரீசுவர் ஸன்னிதிக்குச் சென்றார்கள்.

அங்கே பிரேமன் தனது இருகரங்களையும் தலைமேல் தூக்கிக் கொண்டு ஈச்வரனை நோக்கி "ஹே தீனபந்தோ, நீ எல்லாவற்றிற்கும் சாக்ஷியாதலின் உமது பசுக்களின் பால், தயிர், நெய் முதலியவற்றை சிறிதும் நான் கவரவில்லை என்னும் என்னுரையை உண்மையென்று இச்சனக் கூட்டத்தில் எல்லோரும் கேட்க தேவரீர் என்பக்கம் சாக்ஷி சொல்லி என்னைக் காத்தருளவேண்டும்" என்று கதற பிரேமவல்லபராகிய பகவான் லிங்கத்தின் உள்ளிருந்தபடியே "இப்பிரேமன் என் திரவியத்தை சிறிதும் கவரவில்லை, இதற்கு நானே சாக்ஷி, ஆதலால் நீ இவனை விலங்கு தெரித்துவிட்டுவிடு, கொஞ்சமும் வருந்தாதே வருந்தாதே" என்று மயிர்க்கூச்சல் உண்டாகும்படி கம்பீரமாக உரைத்தருளிய வசனத்தைக் கேட்டு அங்குள்ள எல்லோரும் ஆச்சரியம் கொண்டார்கள். ஆனால் துர்புத்தியுள்ள வசியானவன் 'நீ இந்திரஜாலவித்தை செய்கின்றாய்' என்று சொல்லிக்கொண்டு நிரபராதியான பிரேமனை சவுக்கால் ஓர் அடி அடித்தான். உடனே காலாக்கினி ருத்ரனாகிய மகாதேவனுக்கு அளவிலடங்காத கோபம் உண்டாய் அவ் வசியை தஹிப்பதற்காகத் தனது கையிலேந்திய மழுவை விடுக்க, ஜ்வாலையோடும், பொறியோடும் பயங்கரமாக வரும் அம்மழுவைக் கண்டு அதற்கு எதிரில் இருந்த பலிபீடமானது பயந்து தென்புரத்தில் ஒதுங்கிற்று. வசியும் அவனால் முடிந்தமட்டில் ஓட்டம் பிடித்தான். ஆனால் அம்மழுவானது அவனைத் தொடர்ந்து கணப்பொழுதில் அவனைச் சாமபலாக்கிற்று. அம்மழு சென்ற வேகத்தில் காதவழி தூரம் கிழக்கே சென்று திருவையாற்றுக்கு எதிர்த்துறையில் கொள்ளிடக் கரையோரமாய் உள்ள ஸ்தலத்தில் நர்த்தனமாடியடங்கியதால் அக்காரணம் பற்றி அந்த ஸ்தலததிற்கு திருமழுவாடி என்ற பெயர் இடப் பெற்றிருக்கின்றது. பிறகு கருணாநிதியாகிய பிரேமபுரீச்வரர் தேவர்கள் துதிக்க, ரிஷபாரூடராய்த் தோன்றி தனது பக்தனாகிய பிரேமனுக்கு மோக்ஷத்தைக் கொடுத்து அனுக்கிரகித்தனர். இந்த ஸ்தலத்தில் பலிபீடமானது இபபொழுதும் தெற்கு பக்கத்தில் ஒதுங்கியிருப்பதை எல்லோரும் கவனிக்கலாம்.

மேலன்பிலில் எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் வடிவழகிய, நம்பிஸுந்தரராஜப்பெருமாள். தாயார் சுந்தரவல்லி யென்னும் அழகியவல்லி. தாரகவிமானம், மண்டுக புஷ்கரணி, கிழக்கே திருமுகமண்டலம், போகசயனம், பிரம்மாவுக்கும் வால்மீகி மகரிஷிக்கும் பிரத்தியக்ஷம், திருமழிசைப்பிரான் மங்களாசாஸனம். இந்த திவ்யதேசம் மிகவும் ஏகாந்தமானது. முற்றுந்துறந்த முனிவர்கள் தங்கி வசிபபதற்கேற்ற இடம்

திருவன்பில் திருப்பதியானது சோணாட்டில் தொன்று தொட்டு மாப்பெருஞ்செல்வமுள்ள வளநகரென்பதற்கு மற்றுமோர் உதாரணமென்னவெனின், ஒருகாலத்தில் கவிச்சக்ரவர்த்தியாகிய கம்பர் அன்பிலுக்குச் சென்றதில், அக்காலத்தில் அங்கிருந்த தாசியான சிலம்பியென்பாள், அவரால் தானுமோர் பாடல் பெற விரும்பி அவரைக் கண்டு வணங்கித் தன் மீதோர் பாட்டைப் பாடவேண்டுமென்று அவரை வேண்டிக் கொள்ள, அதற்கு அவர் தாம் பாடும் பாட்டொன்றுக்கு ஆயிரம்பொன் பரிசாகக் கொடுத்தாலன்றிப் பாடமாட்டோமென்ன, அவள் தன்னிடம் ஐந்நூறு பொன் தான் இருக்கிறதென்றும், அதற்கு மட்டுமாவது பாதிப்பாட்டைப் பாடித்தரவேண்டுமென வருந்திக் கேட்க அவர்

"தண்ணீரும் காவேரி தார்வேந்தனுஞ் சோழன்
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள்"

என்று பாதிப்பாட்டை மட்டும் பாடிக்கொடுத்துவிட்டுச் சென்றார். பின்பு வெகுநாட்கழித்து ஒருநாள் அவளது அதிர்ஷ்டவசத்தால், உலகம் புகழும் ஔவையார் அன்பிலுக்குச்சென்று அங்கே பட்டினியாயிருக்கையில், ஔவையின் பெருமையைச் சிறிதுமறியாதவளும் தன்னிடமிருந்த பொருளையெல்லாங் கம்பரிடங் கொட்டிக் கொடுத்துவிட்டு வறுமையுற்றிருந்தவளுமான அந்தச் சிலம்பி யென்னும் தாசி எப்பொழுதுமே இயல்பாக யாரிடத்தும் அன்பு உடையவளாதலின், தனது பிறவிக்குணமாகிய ஈகைத் தன்மையால் கட்டுண்டு அவளது பசியினை யாற்றுவிக்குமாறு நகைமுகங்கொண்டு அவளுக்குச் சிறிது கூழை வார்க்கவே, அவளும் அதனால் தன் பசியை யாற்றிக் கருணை கூர்ந்து, அவளுடைய வீட்டின் சுவற்றில் எழுதப்பட்டிருந்த அந்த அரைப்பாட்டைக் கண்டானந்தங் கொண்டு, அதனோடு:—

"அன்பிற் சிலம்பி யாவிந்தத் தாளடியாள்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்று தான் மறுபாதியைப் பாடி அந்தப்பாடலைப் பூர்த்தி செய்தாள். இக்காரணம்பற்றித்தான் ஔவையாருக்குக் கூழுக்குப்பாடினவளென்னுங் காரணப் பேரொன்று அன்று தொட்டு எங்கும் வழங்கத் தலைப்பட்டது.

இவ்வாறாகப் பிரேமபுரி யென்னும் அன்பில் க்ஷேத்திரம், ஸ்ரீய:பதியினாலும், உமாபதியினாலும் ஒன்று சேர்ந்து நித்தியவாஸஞ் செய்யப்படுகின்றதும், பண்டைக்காலத்துப் பக்தர்களைப் புனிதமாக்கினதுமான மூதூர் என்பதற்கு இது போன்ற இன்னும் பல காரணங்களுமுள.

மேலன்பில் ஸுந்தரராஜப்பெருமாள்கோயில் மூலஸ்தானத்தின் பின்புறம் மதிளில் வெட்டப்பட்டிருக்கிற சாஸனமானது கி. பி. 1063—வருஷத்துக்கும் 1075—ம் வருஷத்துக்கும் இடையே ஆண்ட முதலாவது சோழனான வீரராஜேந்திரன் காலத்தில் என்றிருப்பதனாலும், அக்காலத்தில் அரசர்களுக்குள்ள வழக்கப்படி வித்வான்களால் பாடப்பெற்ற அவ்வவ்வரசனின் மெய்க்கீர்த்தியினுள் 'திருவளர் என்று தொடங்கிவருவது அவ்வரசனுக்குரியதாதலாலும், அவன் காலத்திலே அக்கோயிலில் முதலிலே அந்தச் சிலாசாசனமெழுதப் பட்டதாகவேண்டும். மெய்க்கீர்த்தியெனறால், இன்னதென்று யார்க்குமெளிதிற்புலப்படுமாறு அந்தந்த அரசனின்பெருமையெல்லாம் யாரும் அறியும்படி விரித்துக் காட்டப்பட்டிருப்பது என்பதற்கு அதன் முதலிலுள்ள சிறிது அடிகளை மட்டும் இங்கு எடுத்துக்காட்டப்படுகின்றது:—

வீரராஜேந்திரதேவன்.

"திருவளர் திரள்புயத் திருநில வலயந் தன்மணிப் பூணெனத் தாங்கப் பன்மணிக் கொற்றவெண் குடைநிழல் குவலயத் துயிர்களைப் பெற்ற தாயினும் பேணி மற்றுள வறை

கழ லரையர்த னடிநிழ லொதுங்க வுறைபிலத் துடைகலி ஒதுங்க முறைசெய்து விரைம லர்த் தெரியல் விக்கலன் றன்னொடு வரிசிலைத் தடக்கை மாசா மந்தரைக் கங்க பாடிக் களத்திடை நின்றுந் துங்கபத் திரிபுகத் துரத்தி யாங்கவர் வேங்கைநன் னாட்டிடை மீட்டு மவர் விட்ட தாங்கரும் பெருவலித் தண்டுகெடத் தாக்கி மாதண்ட நாயகன் சாமுண்டரா யனைச் செற்றவன் சிரத்தினை யறுத்து மற்றவ னொருமக ளாகிய இருகையன் றேவி நாகவை யென்னுந தோகையஞ் சாயலை முகத்தொடு மூக்குவே றாக்கிப பகைத்தெதிர் மூன்றாம் விசையினு மேன்றெதிர் பொருது பரிபவந் தீர்வன எனக் கருதிப் பொருபுனல் கூடல் சங்கமத் தாகவ மல்லன் மக்க ளாகிய விக்கலன் சிங்கண னென்றிவர் தமமொடு மெண்ணில்சா மந்தரை''

இந்த முதல் சாசனத்தின் துவக்கத்தில்,

"அன்ன வயல் சூழ் அன்பிலவர்கள் நீடி யழகெய்தி முப்பொழுதுங் கண்டு போற்ற மன்னு மழகிய பெருமாள இளையகோவை மலர்மகளை மாருதியை யெழுந்தருளுவித்தோங் கன்னநய குடைத் தடக்கைப்பட் டருணநிதி காண்டகுசீர்க் கிளைதாஙகிக் கலைகள் ஒதிச் செந்நெல் வயல்சூழ் வீரசிங்கம் எங்கள் சீர்க்குருகூர் நம்பியெனுஞ் செழுமறையோன் தானே.''

என்றதனுள், "அழகியபெருமாள்'', "இளையகோவை'', "மலர்மகளை'' "மாருதியை'' என் றிருப்பதைக் காண்கையில், இக்கோயில் ஸ்ரீராமபிரானுக்குரியதென்று நிச்சயிக்கவேண் டும். ஆனால், இங்கேயுள்ள விக்கிரகங்களெல்லாம வேறாகவிருக்கின்றன. சற்று ஊன் றிப் பார்ப்பின், அன்பிலுக்கும், கீழன்பிலுக்கும் சுமார் மூன்றுமைல் கிழக்கே காவிரிக்க ரையோரமாகவுள்ள 'நத்தம்' என்னும் சிற்றூரிலுள்ள புராதனமான ஆலயத்தில் இந்த விக்கிரகங்கள் நான்கும் அழகாய் அமைத்துவைக்கப் படடிருப்பதைக் காண்கையில் இவை தாம் அவையோவென்று ஐயுறும்படியாகின்றது. அங்குள்ள கள்ளஜாதியார் இந்தக் கோயிலைக் கண்ணை யிமைகாப்பது போல் நெடுங்காலமாகக் காப்பாற்றி வருகிறார்கள். இதன் உண்மை நன்கு புலப்படவில்லை. அங்குள்ள சிலாசாசனங்களைப் பார்த்தால் என் னாகுமோ வென்று இன்னுந் தெரியவில்லை. ஒருவேளை அன்பிலில் ஆதியிலே ஏற்பட்டி ருந்த விக்கிரகங்கள் நத்தத்திற்கு கொண்டுபோகப்பட்டிருப்பினுமிருக்கலாம்.

ஸுந்தரராஜப்பெருமாள் மண்டபத்தின் வடவண்டைச் சுவரிலுள்ளது சகாப்தம் ஆண்டு 4408 (1446)ல் எழுதப்பட்டது. அது ஸாளுவமகாராஜா ஆண்டகாலம். அப் பொழுது பிர்மமதேசம் அன்பில் ஜலசயனப்பெருமாளுக்கு ஸ்ரீஜயந்தி புண்ணியகாலத் திலே திருவிடையாட்டமாக சந்திராதித்தியர்வரையும், செய்யாமங்கலம் எல்லைவரையில், பார்க்கவ கோத்திரம், ஜயிமினிஸூத்திரம, புன்னமங்கை அருளாளபட்டர் ஸர்வமானி யஞ்செய்திருக்கிறாரென்று கண்டிருக்கிறது. இதுதான் ராயர் அப்பாச்சி ஆண்ட கா லம் (1445).

அன்பிலிலுள்ள மாரியமமன்கோயிலானது சோழநாட்டிலுள்ள மற்றெல்லா மாரி யம்மன்கோயில்களுக்கும் முற்பட்டதென்பதற்கு அங்கே பூச்சொரிந்து திருநாள் நடந்த

பின்னரே சமயபுரம் மாரியம்மனுக்குத் திருவிழாத் தொடங்கி வருவதே போதுமானது. இந்த மாரியம்மன் கோயில் திருவிழா ஐம்பது வருஷங்களுக்கு முன்னே முற்றுமே வேறாகவிருந்தது. அக்காலத்தில், இளங்காடு, துவாகுடி, கிளியூர், மேட்டுப்பட்டி முதலான பதினெட்டுப் பட்டிக்கள்ளர்களும் அந்தக் கோயில் குடிகளாதல்பற்றி அந்த ஊர்முழுமையும் ஒன்றுசேர்ந்து கொம்பு தப்பட்டைகளின் பேரொலி முழங்க கத்தியுங் கேடயமுமேந்தித் தடியுங்கையுமாகச் செல்லுகையில் பார்த்தால் பார்ப்பதற்கே அச்சமாயிருக்கும். கோயில் வலம் வருமுறைகளில் வழக்கத்துக்கு விரோதமாய் ஏதேனும் சிறிது மாறின் உடனே அது அமர்க்களமாய்ப் பிணக்காடாய் ரக்தவெள்ளமாய்ப் பனங்காய்கள் போலத் தலைகள் வெட்டுண்டு கீழே புரளுவதுமுண்டு. இப்பொழுதும் இந்த அமளி அடங்கினபாடில்லை. ஆதலால் போலீஸாரும், மாஜிஸ்திரேட்டாரும் உத்ஸவகாலங்களில் ஆயுதபாணிகளாய் ஸர்வஜாக்கிரதையாயிருப்பதைக் காணலாம்.

அன்பில் ஏழூர் சேர்ந்ததாதல் பற்றி இவ்வேழூர்களுக்கும் கிராமதேவதை ஒன்றேயாம். "ஓண்ட வந்த பிடாரி ஊர்ப்பிடாரியை யோட்டிவிட்டது" என்ற பழமொழி இவ்வூரிலேதான் பிறந்தது. ஆதியில அன்பிலிலிருந்தது ஊமைப்பிடாரி; அது இப்பொழுது கேட்பாரற்றுக் கீழன்பில் மாரியம்மன்கோயிலினருகே ஓர் மரத்தடி நிழலின்கீழ் நிற்க நிழலுமற்றுத் தள்ளுண்டு கிடக்கிறது:—ஓர் காலவிசேஷத்தில் காவேரியாற்றில் பெரிதான பிரவாகமொன்று வர, அதில் முன் திருவாசியிலிருந்த அம்மன், தன் கோயில் இருந்தவிடந் தெரியாமல் வெள்ளத்தில் அடித்துக்கொண்டுபோகப்பட்டுக் குளிரக்குளிரத் தானும் கட்டைபோல மிதந்துவந்து அன்பில் அம்மனிடம் அடைக்கலம்புக, அது அன்பிலிலுள்ளதாதலால் அன்பு கூர்ந்து, அதற்கு இடங்கொடுக்கப்போக, வந்த பிடாரியாகிய ஆச்சிராமவல்லி அதனை அப்படி ஓட்டிவிட்டதென்று அங்குள்ளோர் கர்ணபரம்பரையாய்ச் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது ரஸ்தாவின் தென்புறமாயிருக்கிற பெரிதான பனந்தோப்பிற்குள்ளே இருக்கிறது. மண்ணச்சநல்லூர் எண்ணெய்வாணியர்முதலான பலர் இதன் குடிகள். சிறிதுகாலத்துக்கு முன்னே லக்ஷம் ரூபாய்க்கு அதிகமாகச் செலவிட்டு இதற்கென்று அழகான ஓர் கோயில் கட்டப்பட்டிருக்கிறது. இதற்கு பூஸ்திதியும் அவர்களால் வாங்கிவிடப்பட்டிருக்கிறது.

---

திருமழிசையாழ்வார் பாடியது:—

நாகத்தணைக்குடந்தை வெஃகாத் திருவெவ்வுள்
நாகத்தணையரங்கம் பேரன்பில் *—நாகத்
தணைப்பாற்கடல்கிடக்கு மாதிநெடுமால்
அணைப்பார் கருத்தனவான். 36

# தேவாரப்பாடல்கள்.

திருஞானசம்பந்தசுவாமிகளருளிச்செய்தது:—

## முதல் திருமுறை—பண்—தக்கராகம்.

கணைநீடெரிமாலரவம் வரைவில்லா, விணையாவெயின் மூன்றுமெரித்தவிறைவர்
பிணையாமயிலுங்குயில் சேர்மடவன்ன, மணையும்பொழிலன் பிலாலந்துறையாரே. 1

சடையார்சதிரன் முதிராமதிசூடி, விடையார்கொடியொன்றுடை யெந்தைவிமலன்
கிடையாரொலியோத் தரவத்திசைக்கிள்ளை, யடையார்பொழிலன் பிலாலந்துறையாரே. 2

ஊரும்மரவஞ்சடை மேலுறவைத்துப், பாரும்பலிகொண்டொலி பாடும்பரமர்
நீருண்கயலும் வயல்வாளைவராலோ, டாரும்புனலன் பிலாலந்துறையாரே. 3

பிறையும்மரவுமுறவைத்த முடிமேல், நறையுண்டெழு வன்னியுமன்னுசடையார்
மறையும்பலவேதியரோத வொலிசென், றறையும்புனலன் பிலாலந்துறையாரே. 4

நீடும்புனற்கங்கையுந் தங்கமுடிமேற், கூடும்மலையாளொரு பாகமமர்ந்தார்
மாடும்முழவமதிரம் மடமாத, ராடும்பதியன் பிலாலந்துறையாரே. 5

நீறார்திருமேனியரூன மிலார்பா, லூறார்சுவையாகியவும்பர் பெருமான்
வேறாரகிலும் மிகுசந்தனமுந்தி, யாறார்வயலன் பிலாலந்துறையாரே. 6

செடியார்தலையிற் பலிகொண்டினிதுண்ட, படியார்பரமன் பரமேட்டிதன்சீரைக்
கடியார்மலரும்புனல் தூவிநின்றேத்து, மடியார்தொழுமன் பிலாலந்துறையாரே. 7

விடத்தார்திகழு மிடற்றன்னடமாடி, படத்தாரரவம் விரவுஞ்சடையாதி
கொடித்தேரிலங்கைக்குலக் கோன்வரையார, வடர்த்தாரருளன் பிலாலந்துறையாரே. 8

வணங்கிம்மலர்மேலயனு நெடுமாலும், பிணங்கியறிகின்றிலர் மற்றும்பெருமை
சுணங்கும்முகத்தம் முலையாளொருபாக, மணங்குந்திகழன் பிலாலந்துறையாரே. 9

தறியார்துகில்போர்த்துழல்வார் சமண்கையர் நெறியாவுணராநிலை கேடினர்நித்தல்
வெறியார்மலர் கொண்டடிவீழுமவரை, யறிவாராவரன் பிலாலந்துறையாரே. 10

அரவார்புனலன் பிலாலந்துறைதன்மேற், கரவாதவர்காழியர் ஞானசம்பந்தன்
பரவார்தமிழ்ப்பத்திசைபாட வல்லார்போய், விரவாகுவர்வானிடை வீடெளிதாமே. 11

---

திருநாவுக்கரசுசுவாமிகளருளிசெய்தது:—

## ஐந்தாம் திருமுறை—திருக்குறுந்தொகை.

வானஞ்சேர்மதி சூடியமைந்தனை, நீநெஞ்சேகெடுவாய் நினைகிற்கிலை
யானஞ்சாடியையன் பிலாலந்துறைக், கோனெஞ்செல்வனைக் கூறிடக்கிற்றியே. 1

சாரணத்தர் கருத்தர் கபாலியார், வாரணத்துரிபோர்த் தமணாளனார்
ஆரணப்பொருளன் பிலாலந்துறை, நாரணற்கரியா னொருநம்பியே. 2

அன்பினானஞ் சமைந்துடனாடிய, வென்பிலானையுரித்துக் களைந்தவன்
அன்பிலானை யம்மானையள்ளூறிய, அன்பினால்நினைந்தார றிந்தார்களே. 3

சங்கையுள்ளதுஞ் சாவதுமெய்யுமை, பங்கனாரடிபாவியேனானுய
அங்கணனெந்தையன் பிலாலந்துறைச், செங்கணாரடிச் சேரவும்வல்லரே. 4

கொக்கிறகர்குளிர்மதிச் சென்னியர், மிக்கரக்கர்புர மெரிசெய்தவர்
அக்கரையினரன் பிலாலந்துறை, நக்குருவருநம்மையறிவரே. 5

வெள்ளமுள்ள விரிசடைநந்தியைக், கள்ளமுள்ளமனத்தவர் காண்கிலர்
அள்ளலார்வயலன் பிலாலந்துறை, யுள்ளவாறறியார் சிலரூமரே. 6

பிறவிமாயப் பிணக்கிலழுந்தினும், உறவெலாஞ் சிந்தித்துன்னியுகவாதே
யறவனெம்பிரானன் பிலாலந்துறை, மறவாதேதொழு தேத்திவணங்குமே. 7

நுணங்குநூலயன் மாலுமிருவரும், பிணங்கியெங்குந்திரிந் தெய்த்துங்காண்கிலர்
அணங்கனெம்பிரானன் பிலாலந்துறை, வணங்குநும் வினைமாய்ந்தரும்வண்ணமே. 8

பொய்யெலாமுறைக் குஞ்சமண்சாக்கியர், கையன்மாருரை கேளாதெழுமினோ
ஐயனெம்பிரானன் பிலாலந்துறை, மெய்யன்சேவடி யேத்துவார்மெய்யரே. 9

இலங்கைவேந்தனிருபது தோளிற்று, மலங்கமாமலைமேல் விரல்வைத்தவ
னலங்கலெம்பிரானன் பிலாலந்துறை, வலங்கொள்வாரைவானோர் வலங்கொள்வரே. 10

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| கோமளம் காஞ்சியாத்திரை ... | 0 | 8 | 0 |
| சாரசநேத்ரி ... | 0 | 12 | 0 |
| காட்டுராஜன் ... | 0 | 3 | 0 |
| திலோத்தமா ... | 0 | 8 | 0 |
| மாதவி ... | 0 | 10 | 0 |
| விக்டோரியா மெய்கீர்த்தி ... | 0 | 12 | 0 |
| மாணிக்கவாசகர் .. | 0 | 10 | 0 |
| கமலபவனம் .. | 0 | 10 | 0 |
| காதலா கருணையா ... | 0 | 14 | 0 |
| பாதாளவாவி ... | 0 | 6 | 0 |
| சந்திரகுப்தன் ... | 0 | 8 | 0 |
| மங்கம்மாள் .. | 1 | 8 | 0 |
| ஞானசுந்தரன் ... | 0 | 12 | 0 |
| கமலநாதன் ... | 1 | 8 | 0 |
| அமிர்த ஸஞ்சீவினி ... | 1 | 2 | 0 |
| மதுராம்பாள் ... | 0 | 12 | 0 |
| வஜ்ரலேகை ... | 1 | 4 | 0 |
| தயாபரஸுந்தரி ... | 0 | 12 | 0 |
| மீனலோசனி ... | 0 | 6 | 0 |
| தீனதயாளு ... | 0 | 12 | 0 |
| பாய்பரமானந்தன் ... | 1 | 0 | 0 |
| ஸோமசுந்தரன் ... | 1 | 0 | 0 |
| யமநாதகன் ... | 0 | 8 | 0 |
| அமரநாதன் ... | 1 | 4 | 0 |
| குணஸுந்தரன் .. | 1 | 4 | 0 |
| கோமளம் குமரியானது ... | 0 | 12 | 0 |
| குலசேகரன் ... | 1 | 0 | 0 |
| நாகபூஷணம் ... | 0 | 12 | 0 |
| பீமராவ் ... | 0 | 10 | 0 |
| விஷதாரி | 1 | 4 | 0 |
| தாரா ... | 0 | 10 | 0 |
| உபநிஷத் பஞ்சகம் ... | 0 | 5 | 0 |
| பாத்திரமறிந்து பிச்சையெடு .. | 0 | 1 | 0 |
| மனைவியின் கடமை ... | 0 | 1 | 0 |
| மகாத்மா காந்தி | 0 | 1 | 0 |
| ராஜராஜேஸ்வரி ... | 1 | 8 | 0 |
| கல்பலதா ... | 1 | 4 | 0 |
| சோமனா ... | 0 | 12 | 0 |
| சித்ரரேகை | 1 | 8 | 0 |
| மாயாவதி ... | 0 | 8 | 0 |

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| விக்ரமோர்வசீயம் ... | 0 | 8 | 0 |
| ராஜபுத்ர வீரன் ... | 0 | 8 | 0 |
| அழகு சுந்தரி ... | 0 | 8 | 0 |
| உத்தரராமாயண கதைகள் ... | 0 | 4 | 0 |
| மரகதவல்லி ... | 0 | 6 | 0 |
| சத்ருஜித் ... | 0 | 12 | 0 |
| ஆஸ்திம்காபாக்யானம் ... | 0 | 5 | 0 |
| சிறுத்தொண்டர் ... | 0 | 8 | 0 |
| ஸ்ரீமதி ... | 0 | 12 | 0 |
| வீரவல்லி ... | 0 | 12 | 0 |
| பாயிரவிருத்தி ... | 1 | 0 | 0 |
| மனோன்மணி ... | 0 | 12 | 0 |
| மனோன்மணி கதை .. | 0 | 8 | 0 |
| செல்வராஜன் ... | 0 | 12 | 0 |
| கமலசுந்தரி ... | 0 | 4 | 0 |
| கம்பர் சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| சந்திரஹாஸன் ... | 0 | 3 | 0 |
| பவழக்கொடி ... | 0 | 8 | 0 |
| காயற்கண்ணி ... | 0 | 12 | 0 |
| ராஜாத்தி .. | 0 | 12 | 0 |
| சிறுமணிச்சுடர் ... | 0 | 1 | 6 |
| அர்ஜுன ஸக்யாவலி .. | 0 | 12 | 0 |
| கதாகதம்பம் ... | 0 | 2 | 0 |
| குசேல வெண்பா ... | 0 | 8 | 0 |
| பகீரதன் ... | 0 | 1 | 0 |
| பாலவிநோதினி ... | 0 | 2 | 0 |
| ஔவையார் ... | 0 | 12 | 0 |
| ஸாவித்திரி சரித்திரம் ... | 0 | 4 | 0 |
| ஜியார்ஜ் மன்னன் சரித்திரம் ... | 0 | 1 | 6 |
| வள்ளியம்மை சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| பாலகங்காதர திலகர் .. | 0 | 4 | 0 |
| திரிலோக மோஹனாங்கி ... | 1 | 0 | 0 |
| ஆர்ய சரித்திரம் ... | 0 | 8 | 0 |
| ராமனும் ஸீதையும் ... | 0 | 1 | 6 |
| ஜீவகன் ... | 1 | 0 | 0 |
| ஸ்ரீராமசந்திரன் ... | 0 | 3 | 0 |
| ஸுபோத பாரிஜாதம் ... | 5 | 0 | 0 |
| தனபாலன் ... | 2 | 0 | 0 |
| பாடல் திரட்டு ... | 0 | 8 | 0 |
| திருவஹீந்திரபுரமான்மியம் ... | 0 | 4 | 0 |

**மானேஜர்,**

**ஸ்ரீ வாணீ விலாஸ புத்தகசாலை,**

**ஸ்ரீரங்கம்.**

ஸ்ரீ வாணீ விலாஸ் பிரஸ்,

ஸ்ரீரங்கம்.